பக்கங்கள் :எட்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 வைகாசி 23 புதன்கிழமை (06.06.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 190

# யாழ்ப்பாண மக்களுக்கென தமிழகத்தில் சேகரித்த பொருள்களை அனுப்பக்கோரி சென்னையில் உண்ணாவிரதம்



இந்தியப் பணத்தில் ஒரு கோடி ரூபா பெறுமதியுள்ள நிவாரணப் பொருள்களை செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக அனுப்புவதற்கு அனுமதி வழங்குமாறு கோரி சென்னை சேப்பாக்கத்தில், தமிழ்த் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் தலைமையில் பெரும் எண்ணிக்கையான தொண்டர்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.

## அனுமதி மறுக்கப்பட்டால் விவகாரம் விஸ்வரூபம் எடுக்குமென வைகோ எச்சரிக்கை

சென்னை, ஜூன் 06

**பட்டினியால் வாடும் யாழ்ப்பாணத்தில் வாழும் தமிழர்களுக்கென, தமிழக மக்களிடம் சேகரிக்கப்பட்ட உணவு மற்றும் நிவாரணப் பொருள்களை அங்கு அனுப்புவதற்கு அனுமதி வழங்குமாறு வலியுறுத்தி-**

**சென்னையில் நேற்று பழ. நெடுமாறன் தலைமையில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்பட்டது.**

யாழ். குடாநாட்டு மக்களுக்கு நிவாரணப் பொருள்களை அனுப்புவதற்கு அரசாங்கம் மறுத்தால், இந்த விவகாரம் தமிழகத்தில் விஸ்வரூபம் எடுக்கும் என்று, மறுமலர்ச்சித் திராவிடக் கழகப் பொதுச் செயலாளர் வைகோ, உண்ணாவிரதத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில், எச்சரிக்கை விடுத்தார்.

மோதல்கள் நடைபெற்றுவரும் யாழ்ப்பாணத்தில் பலர் பட்டினியால் வாடுகின்றனர். அவர்களுக்கு உதவும் பொருட்டு தமிழ் ஈழவிடுதலை ஆதரவாளர் குழு சார்பில் உணவு, மருந்து மற்றும் நிவாரணப் பொருள்கள் சேகரிக்கப்பட்டன. இந்திய நாணயப்படி ஒரு கோடி ரூபா பெறுமதியான இந்த நிவாரணப் பொருள்களை செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக அனுப்புவதற்கு (08ஆம் பக்கம் பார்க்க)

## மாங்குளம், கிளிநொச்சிப் பகுதிகளில் நேற்று விமானத் தாக்குதல்

வன்னியில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் மாங்குளம் பகுதி மீது இலங்கை விமானப்படை விமானங்கள் நேற்றுப் பகல் குண்டுத் தாக்குதல் நடத்தியிருக்கின்றன.

பிற்பகல் 1.30 மணியளவில் அங்கு விடுதலைப்புலிகளின் இனங்காணப்பட்ட இலக்குகள் மீதே குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று இராணுவப் பேச்சாளர் தெரிவித்திருக்கிறார். நேற்றுப் பிற்பகல் 1.15 மணியளவில் கிளிநொச்சி நகரை வட்டமிட்ட 'மிக் - 27' விமானங்கள் கிளிநொச்சிப் பகுதியில் தாக்குதல் நடத்தியதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. (அ-1-ரி-சி)

## விசேட தூதுவர் யசூசி அகாஷி கிளிநொச்சி செல்லமாட்டார்

கொழும்பு, ஜூன் 06



சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்கும் நோக்குடன் நேற்று கொழும்பு வந்தடைந்த ஜப்பானிய விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாஷி வன்னிக்குச் செல்லமாட்டார் என்று அறியப்படுகிறது.

தற்போதைய அரசியல் நிலைவரம் மற்றும் புனர்வாழ்வுப் பணிகள் ஆகியன தொடர்பாக ஜனாதிபதி (08ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் கையளித்த 13 சடலங்களில் இரண்டை மட்டும் படையினர் பொறுப்பேற்பு

கொழும்பு, ஜூன் 06

வவுனியா- மன்னார் முன்னரங்கப் பாதுகாப்பு நிலைகளில் நடைபெற்ற சமரின் போது விடுதலைப் புலிகள் கைப்பற்றிய இராணுவத்தினரின் 15 சடலங்களில் இரண்டை மட்டுமே அரச படையினர் பொறுப்பேற்றனர்.

ஏனைய சடலங்களை ஏற்க மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

இத்தாக்குதலில் மீட்கப்பட்டதாகத் தெரிவித்து 13, சடலங்களை கிளிநொச்சியில் வைத்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகளிடம் விடுதலைப் புலிகள் நேற்று கையளித்தனர். (08ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவை பணியாளர் கொலை: ஐ.நா. செயலர் ஆழ்ந்த கவலை



கொழும்பு, ஜூன் 6

இலங்கையில் தமிழர்களான செஞ்சிலுவைப் பணியாளர்கள் இருவர் ஆயுததாரிகளால் கடத்திப் படுகொலை செய்யப்பட்டமை குறித்து ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீன் மூன் ஆழ்ந்த கவலை தெரிவித்திருக்கின்றார்.

இலங்கையில் மனிதாபிமானப் பணியாளர்களினதும், அப்பாவிப்பொதுமக்களினதும் பாதுகாப்புக் குறித்து அவர் ஐ.நாவின் கரிசனையையும் வெளியிட்டிருக்கின்றார்.

பொதுமக்களினதும் தொண்டுப்பணியாளர்களதும் பாதுகாப்புக் குறித்து சிரத்தை வெளியிட்டிருக்கும் ஐ. நா. செயலாளர் நாயகம் தொண்டுப் பணியாளர்கள் எச்சமயத்திலும் பாதுகாக்கப்பட வேண்டிய உரிமையைக் கொண்டவர்கள் என்பதை நாட்டின் அனைத்துத் தரப்பினருக்கும் நினைவூட்டியிருக்கின்றார்.

கடந்த வெள்ளியன்று கொழும்பு, கோட்டை ரயில்நிலையத்தில்வைத்துபொலிஸ் புலனாய்வுப் பிரிவினரின் பெயரால் கடத் (08ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் அதிரடிப்படை சிப்பாய் கிளைமோருக்குப் பலி!

கொழும்பு, ஜூன் 6

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் அம்பிலாந்துறை பகுதியில் நேற்று முற்பகல் 10 மணியளவில் நடத்தப்பட்ட கிளைமோர்த்தாக்குதலில் அதிரடிப்படைச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றொரு சிப்பாய் காயமடைந்தார்.

அப்பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டி ருந்த அதிரடிப்படையினர் மீதே விடுதலைப்புலிகள் இந்தத் தாக்குதலை நடத்தினர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார். (சி)

## கோட்டையில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூன் 6

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, ஆள்கள் கடத்தப்பட்டுக் காணாமற் போவது, அகதிகளாக்கப்படுவது போன்றவற்றிற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று கொழும்பு கோட்டை ரயில் நிலையம் முன்பாக 'பிரதி ரோதய' என்ற அமைப்பு ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர். 'பிரதிரோதய' அமைப்பின் அழைப்பாளர் விக்கிரமபாகு கருணாரத்ன இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார். (சி)

## புறக்கோட்டையில் நேற்றும் தேடுதல் கடைகள், விடுதிகளில் 25 பேர் கைது!

கொழும்பு, ஜூன் 6

கொழும்பு புறக்கோட்டைப் பகுதியில் நேற்று பொலிஸாரும் படையினரும் இணைந்து பெரும் தேடுதல் நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டனர். இதன்போது அங்கு வர்த்தக நிலையங்கள், தங்கும் விடுதிகளில் இருந்து 25 பேர்வரை விசாரணைக்காக கைது செய்யப்பட்டனர் என்று புறக்கோட்டை பொலிஸ் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நேற்று அதிகாலை முதல் இந்தத் தேடுதல் நடவடிக்கை இடம்பெற்றது. (சி)

**உள்ளே...**

**5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள்**

## இன்று கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூன் 6

செஞ்சிலுவைச் சங்கப் பணியாளர்களின் படுகொலையைக் கண்டித்து இன்று கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

இன்றுமாலை 4 மணிக்கு கொழும்பு ரயில்வே நிலையத்தின் முன்பாக தொண்டர் நிறுவனங்களால் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (சி)

## இயற்கைச்சீரழிவை விட இலங்கையில் நிர்வாக நடைமுறைச்சிக்கலே அதிகம்

### ஐரோப்பிய நாடாளுமன்றப் பகிரங்க விசாரணையில் கருத்து

இலங்கையில் இயற்கைச் சீரழிவை விட நிர்வாக நடைமுறைச்சிக்கலே அதிகம் காணப்படுகின்றன என நேற்று ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் நடைபெற்ற அபிவிருத்திக் குழுவின் பகிரங்க விசாரணைக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

பிரஸெல்ஸ் நகரில் உள்ள ஐரோப்பிய நாடாளுமன்ற கட்டடத்தில் பகிரங்க விசாரணைக் கூட்டம் நேற்று ஆரம்பமானது.

இதில் குறிப்பாக இலங்கை - இந்தோனேசிய நாடுகளில் ஆழிப்பேரலை அனர்த்தத்திற்குப் பின்னரான மீள் கட்டமைப்பு, மனித உரிமைகள், மனிதாபிமான உதவிகள் குறித்து பொது விசாரணைகள் ஆரம்பமாகின.

ஆழிப்பேரலைக்குப் பின்னரான மீள் கட்டமைப்பு குறித்த விவாதம் முதலில் நடைபெற்றது.

இலங்கை அரசின் சார்பில் அதன் பிரதிநிதியாக அமைச்சர் மகிந்த சமரசிங்க பங்கேற்றிருந்தார்.

அவர் அங்கு சமர்ப்பித்த சில அறிக்கைகளும், திட்டமதிப்புகளும் கடும்விமர்சனத்துக்கு உள்ளாகின எனத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தக்கூட்டத்தில் கலந்து கொண்ட பலர் இலங்கையில் இயற்கை அழிவை விட நிர்வாக சீரழிவுகளே அதிகமுள்ளன (08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவக்கொழுந்து கதிரமலை



கீரிமலையைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி வடக்கு, அம்பாள் கோயிலடியை நிரந்தர வதிவிடமாகவும் தற்போது 24, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தவருமான திருமதி சிவக்கொழுந்து கதிரமலை நேற்று (05.06.2007) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வீரவாகு கதிரமலையின் அன்பு மனைவியும் ஜெயக்குமார் (ரொப் வைன் சொப், திருநெல்வேலி), ஜெயதாஸ் (ஜேர்மனி), ஜெயசாந்தி (அம்பாள் மில்) ஆகியோரின் அன்புத் தாயும் பாக்கியலட்சுமி (ஆசிரியை, யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), மல்லிகாதேவி (ஜேர்மனி), றோகினி ஆகியோரின் மாமியும் கீர்த்திகன் (யா/கொக்குவில் இ.க.), ஆர்த்தன் (யா/இந்து ஆ.பா), ஆரபி (யா/இந்து ஆ.பா), அபிஷன், வனிதா (ஜேர்மனி), விமலா (ஜேர்மனி), கோசீலன் (ஜேர்மனி), டினேஸ் (யா/இந்து ஆ.பா) ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2007) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் தற்காலிக வதிவிடத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.24, சிவப்பிரகாசம் வீதி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

*தகவல்:*
**க.ஜெயக்குமார், க.ஜெயசாந்தி**
*(மகன்மார்).*

*(சி/52558)*

## சுப்பையா தியாகராசா



கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா தியாகராசா 02.06.2007 சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - தங்கமுத்து தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற அன்னபூரணம் மற்றும் பூமணியின் (கனடா) அன்புக் கணவரும் முருகையா (அமரர்), ரமணி, சந்திரகுமார், சிவகுமார், சாந்தினி, வசந்தினி, நந்தகுமார் (அமரர்), பாலகுமார், சங்கர்குமார், இந்திரகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அமரர்களான பூரணம், அழகரட்ணம், சின்னத்துரை, நாகேஸ்வரி, இரட்ணசிங்கம் மற்றும் பரமேஸ்வரி, இராஜேஸ்வரி, ஜெயவீரசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (07.06.2007) வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*றயில் றோட்*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*
T.P.: *4590244.*

**0019054719019**
*(கனடா)*

*தகவல்:*
**தி.பாலகுமார்**
*(இலங்கை வங்கி,*
*காங்கேசன்துறை).*

*(61344)*

## சாமிக்குருக்கள் ஸ்ரீஜெயந்திநாதக்குருக்கள் (தம்பி)



இந்திரம்மன் கோயிலடி, துன்னாலை வடக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சாமிக்குருக்கள் ஸ்ரீ ஜெயந்திநாதக்குருக்கள் (தம்பி) 03.06.2007 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட் டார்.

அன்னார் துன்னாலை வடக்கு அமரர் சாமிக்குருக்கள் - வடிவாம்பிகையம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் யாழ்ப்பாணம், அரியாலை அமரர் பாலசுப்பிரமணிக் குருக்களின் கனிஷ்ட புத்திரி லதா அம்மாவின் அன்புக் கணவரும் ஜெனேஸ்வரன், பவதாரிணி ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05.06.2007 செவ்வாய்க்கிழமை பி.ப. 5 மணியளவில் நீர்கொழும்பில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இந்திரம்மன் கோயிலடி,*
*துன்னாலை வடக்கு,*
*கரவெட்டி.*

*தகவல்:*
சாமிக்குருக்கள் சண்முகநாதக்குரு
*(ராசு).*

*(சி/52557)*

## லோகேஸ்வரன் சூரியகலா



கம்பர்மலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட லோகேஸ்வரன் சூரியகலா 03.06.2007 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - அன்னக்கண்டு தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (N.P.S) - மகேஸ்வரி தம்பதியரின் மருமகளும் லோகேஸ்வரனின் அன்பு மனைவியும் மிதுலா, திவாகர் ஆகியோரின் பாசமிகு தாயும் யோகரட்ணம், சந்திரதாஸ், சந்திரகலா, மோகனதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சந்திரலிங்கம், குசலகுமாரி, விஜயகுமாரி, நவகுமாரி, காலஞ்சென்ற சற்குணநாதன் மற்றும் யோகேஸ்வரி- மனோகரநாதன் (பாபு), சிவநேசன் - ஜெயராணி, கனடாவில் வசிப்பவர்ளான கிருஷ்ணதாஸ்ன் - யோகேஸ்வரி, சுந்தரமூர்த்தி- கோணேஸ்வரி, யோகநாதன் - சாரதாதேவி, செந்தில்நாதன் - ஜெயராணி, நாகேஸ்வரி - விவேகானந்தன், ஜெகதீஸ்வரன் - ஜெயரூபி, கோபாலகிருஷ்ணன் - குமுதினி, ஜேர்மனியில் வசிப்பவரான லோகேந்திரன் - புஸ்பராணி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.06.2007 சனிக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**4255 BOURRET**
**H,51x1#105**
**MONTREAL**
**QUEBEC**
**CANADA.**
**T.P.: 5143422860**

*தகவல்:*
**குடும்பத்தினர்.**
*பாரதி வீதி, கம்பர்மலை,*
*உடுப்பிட்டி வடக்கு.*

*(61347)*

---

உ

அன்னை மகாமாரி துணை

ஊர்காவற்றுறை - புளியங்கூடல்

செருத்தனைப்பதி

## ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்

### வருடாந்த மகோற்சவம் - 2007

**கொடியேற்றம் - 08.06.2007**

**தேர்த்திருவிழா - 16.06.2007**

**தீர்த்தோற்சவம் - 17.06.2007**

**ஆலய தர்மகர்த்தா.**

## விற்பனைக்கு

Yamaha, PSR 175 *(புதியது)* ஒகன் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இல.0779527559 *(சி/52544)*

## தவறிவிட்டது

திருக்குடும்ப கன்னியர்மடம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த ஸ்ரனிஸ் லோஸ் பிரான்சிஸ்கா என்பவரது தேசிய அ. அட்டை (655681299V), R.D.A, வவுனியா முகவரியுடைய எட்மன் வரதராஜா பிரான்சிஸ்கா பெயருடைய விசேட அ.அட்டை, எட்மன் வரதராஜா வயலட் வனிஜாவின் பாடசாலை அ.அட்டை (மகாறம்பைக் குளம், வவுனியா) என்பன 04.06.2007 திங்கட்கிழமை யாழ்ப்பாணத்துக்கும் தட்டாதெருச்சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 17, அரசடி ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். T.P.: 077 6152389

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 02 | 07 |
| ★ | ★ |
| 11 | 05 |
| ★ | ★ |
| 1940 | 2007 |

### அமரர் கந்தையா செல்வராசா

எங்கள் குடும்பத்தின்
குலவிளக்கே!
நீங்கள் காட்டிய நல்வழிகளும்
அறிவுரைகளும் - என்றும்
எம்மை விட்டு நீங்காது

*தகவல்:*
திருமதி. செ. தங்கரத்தினம்
(மனைவி - இளைப்பாறிய ஆசிரியர்),
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*ஏழாலை தெற்கு,*
*சுன்னாகம்.*

*(61366)*

## மரண அறிவித்தல்





### சோதிர்ராஜா நிசாந்தன் — சோதிராஜா சுதர்சன்

கச்சேரி நல்லூர் றோட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோதிராஜா நிசாந்தன், சோதிராஜா சுதர்சன் ஆகிய இருவரும் 04.06.2007 திங்கட்கிழமை அகால மரணமடைந்துவிட்டனர்.

அன்னார்கள் சோதிராஜா - சாந்தகுமாரி தம்பதியரின் அன்புப் புதல்வர்களும் சாந்தினி, மோகன்காந்த், சந்தோஷினி ஆகியோரின் அன்புச் சகோதரர்களும் ஜெயக்குமாரின் மைத்துனர்களும் ஆவர் நிசாந்தன் - விஜிதாவின் அன்புக் கணவரும் விதுஷனின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னார்களின் இறுதிக்கிரியைகள் நாளை (07.06.2007) வியாழக்கிழமை மு.ப.10 மணிக்கு அவர்களின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல்கள் செம்மணி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
**சோதிராஜா** *(தந்தை),*
[illegible]

*30, கச்சேரி நல்லூர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*(61357)*

---

உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

**யாழ்ப்பாணம் திருவண்ணை**
**அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தான**
**பிரதம குருக்கள்**
**சிவாகமகிரியா ஜோதி - பிரம்மஸ்ரீ**
**சி.ஜோதீந்திரக்குருக்கள் அவர்களுக்கும்**
**சௌபாக்கியவதி**
**திருமதி ஜோ.ஞானப்பூங்கோதை அவர்களுக்கும்**

இன்றைய தினம் (06-06-2007) நடைபெறும்

**ஷஷ்டியப்த பூர்த்தி விழாவை**

முன்னிட்டு தேவஸ்தான ஆதீனகர்த்தாக்கள் யாபேரும், அம்பிகையின் பரிபூரண கிருபா கடாட்சம் பெற்று வாழப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(61358)

தேவஸ்தான ஆதீனகர்த்தாக்கள்


Hatton National Bank

## அடகுப் பொருள்களை மீட்டல்/ விற்பனைக்கான அறிவித்தல்

*எமது கிளைகளான யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, மானிப்பாய் ஆகிய கிளைகளில் அடகு சேவை வசதி பெற்ற வாடிக்கையாளர் கவனத்திற்கு,*

*நீங்குள் பெற்ற அடகுக் கடனுக்குரிய சிட்டின் மறுபக்கத்தில் குறிப்பிட்ட விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய அடகு வைக்கப்பட்டுள்ள பொருள்களை ஒருவருட காலத்திற்குள் கடன் செலுத்தப்பட்டு மீட்கப்பட வேண்டும் என்பதனை அறியத் தருகின்றோம்.*

*உங்களால் பெறப்பட்ட கடனின் முழுப்பகுதியையும் உடனே செலுத்தமுடியாவிட்டால் கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா 500/-) செலுத்தி காலாவதித் திகதியை நீடித்துக்கொள்ளலாம்.*

*ஒருவருடத்திற்கு மேற்பட்ட அடகுப் பொருள்களை மீட்க காலாவதித் திகதியை நீடிக்க, ஆவண செய்யாத வாடிக்கையாளர்களின் அடகுப் பொருள்கள் ஏலத்தில் விற்பனைக்கு விடப்படும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றோம்.*

(சி-52559)

**முகாமையாளர்.**


## இதய அஞ்சலி

*எமது கல்லூரி முதல்வர்* **க.சிவாஜி**
*அவர்களின் சிறியதாய்*

### திருமதி தில்லிமலர் பசுபதி

*(இளைப்பாறிய ஆசிரியர்)*
*அவர்களின் பிரிவுகுறித்து எமது இதய அஞ்சலியினைச் சமர்ப்பிக்கின்றோம்.*

பிரதி அதிபர், உப அதிபர்கள், ஆசிரியர்கள்,
**ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்.**

(61359)

# மரண அறிவித்தல்கள்

## கிருஷ்ணர் துரைராஜா

*(இளைப்பாறிய இ.போ.ச.சாரதி - மன்னன்)*



கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணர் துரைராஜா 05.06.2007 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை - பொன்னம்மாவின் மகனும், அமரர் சின்னப்பு - யோகம்மாவின் மருமகனும், விக்ரோறியா (சின்னலா)வின் அன்புக் கணவரும், ஸ்ரீகாந்த் (பிரான்ஸ்), சுபேஸ்காந் (பிரான்ஸ்), ஆரணி ஆகியோரின் பாசமிகு தந்தையும் அமரர்களான குணபாலசிங்கம் (புதுக்குடியிருப்பு), கனகராசா ஆகியோரின் சகோதரனும் சாந்தினி (பிரான்ஸ்), மாலினி (பிரான்ஸ்), ஆகியோரின் மாமனும் அபிநயா, சிந்துஜா, அனுஷன் (பிரான்ஸ்) ஆகியோரின் ஆசைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2007) புதன்கிழமை 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*கோப்பாய் மத்தி,*
*பிள்ளையார் கோயிலடி.*

தகவல்:
**மனைவி, மக்கள்,**
**பேரமக்கள்**

(61354)

## சந்திரகுமார் சந்துரு



கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரகுமார் சந்துரு 04.05.2007 திங்கட்கிழமை அகால மரணமாகிவிட்டார்.

அன்னார் சந்திரகுமார் - கௌசல்யா தம்பதியரின் அன்பு மகனும் மீரா, செந்தில்குமார், சந்திரிக்கா, காலஞ்சென்ற சங்கீதா மற்றும் பிரதாப் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பிரதீபன், தாரணி, தீபன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2007) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கட்டப்பிராய்,*
*கல்வியங்காடு.*

தகவல்:
**S.சுந்தர் குடும்பத்தினர்.**

(61356)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் வன்முறைகள் தொடருமானால் சமாதானத்தை எட்டுவது மிகக் கடினமானது

## வலியுறுத்துகிறார் பிரிட்டிஷ் தூதுவர்

கொழும்பு,ஜூன்6

''இலங்கையில் வன்முறைகள் தொடருமானால் சமாதானத்தைக் கொண்டுவருவதில் பாரிய பின்னடைவை எதிர்நோக்கவேண்டிவரும்'' - இவ்வாறு இலங்கைக்கான பிரித்தானியத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்களை உதாரணமாகக் காட்டி பிரித்தானியத் தூதுவர் டொமினிக் சில்கொட் இந்த அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையின் சட்டம் மற்றும் ஒழுங்கு நிலைமையின் பாரதூரமான தன்மையைக் கணிப்பிடுவதற்கு இரத்மலானையில் சன நெருக்கடிமிக்க இடத்தில் தமது வழமை யான நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவர் கள் ஏழுபேர் கொல்லப்பட்டமை, மட்டக்களப்பைச் சேர்ந்த இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள் இருவரை கொழும்பில் வைத்துக் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டமை ஆகியவற்றை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

இவ்வாறான சம்பவங்கள் மேலும் அதிகரிக்குமானால், சமாதானத்தை நாட் டில் மலரச் செய்வதென்பது மிக இக்கட் டான காரியமாகவே இருக்கும்.

இந்தச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். - என்றார். (சி)

# குருநகர் பிரதேச வைத்தியசாலையில் சிரமதானம்

குருநகர்,ஜூன்6

யாழ்.சேவாலங்கா நிறுவனத்தினரும் குருநகர் சென்.றோக் சனசமூக நிலைய உறுப்பினர்களும் இணைந்து அண்மையில் குருநகர் பிரதேச வைத்தியசாலையில் சிரமதானப் பணி செய்தனர்.

வைத்தியசாலையின் வளவு துப்புரவு செய்யப்பட்டதுடன் வைத்தியசாலைக் கட்டடத்துக்கும் வர்ணம் பூசப்பட்டது.

இச்சிரமதானப் பணி நிகழ்வில் யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன், றெக்கிளமேசன் கிழக்கு கிராம சேவையாளர் எஸ்.யூலன், வைத்தியசாலையின் அபிவிருத்திச் சங்கச் செயலாளர் ஜி.எட்வேட் ஆகியோரும் பங்குகொண்டனர். (202-51)



சிரமாதானப் பணியில் ஈடுபட்டிருக்கும் இளைஞர்கள்.
சிரமதானப் பணியில் ஈடுபட்டவர்கள் (உள்ளே)கூட்டாக.

# சிவகுமாரன் நினைவாக யாழ்.பல்கலைக்கழகத்தில் இரத்ததானம்

யாழ்ப்பாணம்,ஜூன்6

தமிழர் விடுதலை, தமிழ் மாணவர்கள் விடுதலை ஆகியவற்றுக்காகக் குரல் கொடுத்துத் தன்னை அர்ப்பணித்த பொ.சிவகுமாரனின் நினைவு தினத்தையொட்டியும் ஏ-9 வீதி மூடப்பட்ட பின்னர் சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களான சிவசங்கர், கமலதாஸ், சிவரஞ்சன் ஆகியோரின் ஞாபகார்த்தமாகவும் இரத்த தான நிகழ்வொன்று நேற்று செவ்வாய்க் கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இந்த நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தது.

இந்த இரத்ததான நிகழ்வில் பல்கலைக் கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர்கள் என சுமார் 150 இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு இரத்ததானம் செய்தனர். (50)

# அறிவுறுத்தலுக்கமைய செயற்படாத வர்த்தகர்களுக்கு எதிராகச் சட்ட அதிகாரங்கள் பயன்படுத்தப்படும்

யாழ்ப்பாணம்,ஜூன்6

யாழ்.செயலகத்தின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருள்களை விற்பனை செய்யாத வர்த்தகர்களின் இருப்புக்களை, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சபையின் சட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

இப்படி தெரிவித்துள்ளார் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ்.

யாழ்.செயலகத்தில் திங்களன்று நடந்த கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்

அவர் அங்குபேசுகையில் கூறியதாவது:-

யாழ்.மாவட்டத்தில் பாவனையாளர்களிடம் இருந்து பல்வேறு தரப்புக்களுக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பொருள்களின் விலைகள் தொடர்பாக திருப்திகர மற்ற நிலை வெளிக்காட்டப்பட்டுள்ளது.

பாவனையாளர்களின் நன்மை கருதி செயலகம் விடுக்கும் அறிவுறுத்தல்களின்படி செயற்படவேண்டும். இன்று இங்கு எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்த சகல வர்த்தகர்களும் முன்வரவேண்டும்.

அத்துடன் பொருள்கள் கொண்டுவர உதவிகள் நல்கும் நிறுவனங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி பொருள்கள் சீராக வருவதற்கு உதவவேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் வெங்காயம், புகையிலை, பனை உற்பத்திப் பொருள்கள், வாழைப்பழம் போன்றவற்றை கப்பல் மூலம் அனுப்ப சகலரும் முன்வரவேண்டும் - என்றார். (1)

# முன்பள்ளி சிறாருக்கு போஷாக்கு உணவு

குருநகர்,ஜூன்6

பருத்தித்துறை, தெல்லிப்பழை ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் இயங்கும் முன்பள்ளி சிறார்களுக்கு போஷாக்கு உணவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

போரூட் நிறுவனம் இதற்கான உதவிகளை வழங்க முன்வந்துள்ளது. எனவும் இத்திட்டத்தைச் செயற்படுத்த சுகாதாரத் தொண்டர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாகவும் யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

(203-51)

# வடமராட்சியில் உலக வங்கியின் வீட்டுத் திட்டத்தை செப்ரெம்பருக்குள் பூர்த்தி செய்யுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஜூன்6

வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் உலக வங்கியின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் வீடமைப்புத் திட்டங்கள் யாவும் எதிர்வரும் செப்ரெம்பர் மாத்திற்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்று அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி வடக்கு பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

இப்பிரதேசத்தில் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் வீடுகளை இழந்தோரில் ஒரு பகுதியினர் உலக வங்கியின் நிதியுதவியுடன் வீடமைக்கும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்களையே செப்ரெம்பர் மாத்திற்குள் வேலைகளை முடிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

வடமராட்சி அல்வாய் வடக்கில் நிக்கொட் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் வீடமைப்புத் திட்டங்களை அண்மையில் நெதர்லாந்து நாட்டின் இலங்கைக்கான பிரதித் தூதுவர் நேரில் சென்று பார்வையிட்டார். அதன்போது பயனாளிகளின் நிலையைக் கருத்தில் கொண்டு இவ்வருட இறுதிக்குள் வீட்டுத் திட்ட வேலைகளைப் பூர்த்தி செய்யுமாறு காலஅவகாசம் வழங்கியுள்ளார்.

ஆழிப்பேரலை அனர்த்ததால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென அல்வாய் வடக்கில் இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான 22 வீடுகளை நெதர்லாந்து அமைப்பான நிக்கொட் நிறுவனம் அமைத்து வருகின்றது. இந்த வீட்டுத் திட்டங்களையே பிரதித் தூதுவர் நேரில் சென்று பார்வையிட்டார்.

தூதுவருடன் பருத்தித்துறை உதவித் பிரதேச செயலர் உஷா சுபாஸ்கரன், உதவித் திட்டப் பணிப்பாளர் திருமதி எஸ்.தயாலிங்கம் ஆகியோரும் நேரில் சென்று பயனாளிகளுடன் கலந்துரையாடினர்.

வீட்டுத் திட்டத்துக்கான கொடுப்பனவுகள் உரிய நேரத்தில் கிடைக்காமையாலும் வீடு கட்டுவதைற்குத் தேவையான மூலப் பொருள்களில் சில தட்டுப்பாடாக உள்ளதாலும் குறிப்பிட்ட கால எல்லைக்குள் - அடுத்த மாத இறுதிக்குள் - வேலைகளைப் பூர்த்தி செய்யமுடியாதுள்ளதாகப் பயனாளிகளால் பிரதித் தூதுவருக்குச் சுட்டிக்காட்டப்பட்டது. இதையடுத்தே எதிர்வரும் டிசெம்பர்வரை அவர் கால அவகாசம் வழங்கினார்.

(203-160-70)

# வேண்டாத பழக்கங்களைத் தவிர்த்துக்கொண்டால் கருப்பைப் புற்றுநோயிலிருந்து தப்பிக்கொள்ளலாம்

**கண்காட்சியூடான புற்றுநோய் விழிப்புணர்வு நிகழ்வும் மருத்துவ ஆலோசனையும் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் குடாநாட்டில் (பரவலாக) குறிப்பிட்ட பாடசாலைகளில் நடத்தப்பட்டு வருகின்றன. இன்று புதன்கிழமை நெல்லியடி மத்தியமகா வித்தியாலயத்தில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.**

**இந்நிகழ்வில் மாணவர்கள், பொதுமக்கள், நோயாளர்கள் மற்றும் அனைவரும் கலந்துகொள்ளவேண்டும் என்று ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.**

**புற்றுநோய் விழிப்புணர்வு நிகழ்வையொட்டி இந்த ஆக்கம் வெளியிடப்படுகிறது.**

கருப்பை கழுத்து புற்றுநோய் என்பது கருப்பையின் கீழ்ப்பகுதியையும் பிறப்பு கால்வாயையும் (ஜோனி வழி) இணைக்கும் பகுதியான கருப்பைக் கழுத்து பகுதியின் சுவர்களில் ஏற்படும் புற்றுநோய்க்குரிய மாற்றமாகும்.

பெண்களில் ஏற்படும் புற்றுநோய்களில் 13 சதவீதம் இவையாகும். ஆரம்ப நிலையிலேயே அடையாளம் காணப்பட்டால் சிகிச்சை மூலம் முழுமையாகக் குணமாக்கப்படக்கூடியது.

**கருப்பைக் கழுத்து புற்றுநோய் ஏற்படுவதற்கு ஏதுவான காரணிகள்**

1) பாலியல் உடலுறவைக் குறைந்த வயதிலேயே ஆரம்பித்தல்.

2) ஒன்றுக்கு மேற்பட்டவர்களுடன் உடலுறவு கொள்ளல்.

3) ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களுடன் தொடர்புடைய ஆணுடன் உடலுறவு கொள்ளல்

4) இளவயதிலேயே உடலுறவை ஆரம்பித்த ஆணுடன் அல்லது கருப்பைக் கழுத்து புற்றுநோய் உள்ள பெண்ணுடன் தொடர்புடைய ஆணுடன் உடலுறவு கொள்ளுதல்

5) நீண்டகாலம் வாய்மூலமான கருத்தடை மாத்திரைகளை உட்கொள்ளுதல்

6) முன்தோலினை நீக்கம் செய்யாத ஆணுடன் உடலுறவு கொள்ளல்.

7) சில வைரஸ் தொற்றுகள்

1. பாலுண்ணி ஏற்படுத்தும் வைரஸ் (HPV)
2. ஹேப்பீஸ்

8) புகைத்தல்,

நோய் எதிர்ப்பு சக்தி குறைவு, எயிட்ஸ் நோயாளிகள், உறுப்பு மாற்று சத்திர சிகிச்சை செய்தவர்கள்.

9) விற்றமின் A குறைபாடு உடையவர்கள்

10. அதிக எண்ணிக்கையான குழந்தைப் பேறு கொண்டவர்கள்

மேற்குறிப்பிட்டவற்றில் வேண்டாத பழக்கங்களைத் தவிர்த்துக் கொண்டால் கருப்பைக் கழுத்துப் புற்றுநோயாளி மாறும் சாத்தியங்களைக் குறைத்துக்கொள்ளலாம்.

**கருப்பைக் கழுத்து புற்றுநோய்க்கான அறிகுறிகள்**

1) மாதவிடாய் நின்ற பின்னர் ஏற்படும் இரத்தப்போக்கு

2) மாதவிடாய்கு இடையேயான இரத்தப் போக்கு

3) உடலுறவின் பின்னான இரத்த போக்கு

4) அதிகளவு துர்நாற்றத்துடன் கூடிய வெள்ளைப் படிதல்

✱ நோய் முற்றிய நிலையில்
- கால் வீக்கம்
- கால் வலி, இடுப்பு வலி
- சிறுநீருடனான இரத்தப்போக்கு
- மலத்துடனான இரத்தப்போக்கு
- வயிற்றோட்டம் என்பன காணப்படலாம்.

இப்புற்றுநோயினை ஆரம்ப நிலையிலேயே கண்டறிவதற்கு PAP Smear எனப்படும் பரிசோதனையை கிரமமாக சுகவனிதயர் கிளினிக்கில் மேற்கொள்ளப்படுவதன் மூலம் புற்றுநோய் மூல்மான தாக்கங்களையும் மரணங்களையும் குறைக்கக் கூடியதாக இருக்கும்.

கருப்பைக் கழுத்துப் புற்றுநோய்க்குரிய அறிகுறிகள் காணப்பட்டால் விரைவாக வைத்திய உதவியைப் பெறுவதன்மூலம் புற்றுநோயிலிருந்து விடுபட்டு சுகமான எதிர்காலத்தை ஏற்படுத்திக்கொள்ளலாம்.

மருத்துவ மாணவர்கள்:
வே.ஜெ[illegible], பு.ஜெ[illegible]
(4ஆம் [illegible] மருத்துவபீட
யாழ். பல்கலைக்கழகம்)

# பஸ் சேவை மாற்றத்தால் மக்கள் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம்,ஜூன்6

இளவாலையில் இருந்து யாழ். நகர் நோக்கிக் காலை 6.45 மணிக்குப் புறப்படும் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் 788 பாதை இலக்க பஸ் சேவை பாடசாலை சேவையாக மாற்றப்பட்டுள்ளதனால் அரச ஊழியர்கள் மற்றும் பருவகாலச் சீட்டுப் பெற்றவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை காலமும் பொதுமக்களும் பாடசாலை மாணவர்களும் பயணம் செய்யக்கூடிய வகையில் நடைபெற்று வந்த இந்த பஸ் சேவை கடந்த முதலாம் திகதி முதல் முற்றாகப் பாடசாலை மாணவர்களுக்கான பஸ் சேவையாக மாற்றப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அரச ஊழியர்கள், பருவ காலச் சீட்டுப் பெற்றவர்கள் பயணம் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

காலை 7 மணிக்கு வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் 764 பாதை இலக்க பஸ் சேவை இளவாலையில் இருந்து யாழ்.நகர் நோக்கி நடைபெறுகின்றபோதும் அது நேரம் பிந்தி யாழ். நகரை வந்தடைவதால் அரச மற்றும் தனியார் ஊழியர்கள் அலுவலகங்களுக்குப் பிந்திச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே காலை 6.45 மணிக்கு இடம் பெறும் 788 பாதை இலக்க பஸ் சேவையை பொதுமக்களும் பயணிக்கக் கூடியதாக மாற்றுமாறு பொதுமக்கள் கோரியுள்ளனர். (50)

## 30.05.2007ஆம் திகதி புதன்கிழமை வெளிவந்த புலமைப்பரிசில் பரீட்சை வினாப்பத்திரத்திற்கான விடைக்குறிப்புகள் இங்கு பிரசுரமாகின்றன

*(1) 4 (2) 2 (3) 2 (4) 2 (5) 2 (6) 1 (7) முகவரி (8) 2 (9) 2 (10) 2*
*(11) 3 (12) 3 (13) 1 (14) 1 (15) 3 (16) 2 (17) 2 (18) 1 (19) 3 (20) 3*
*(21) 1 (22) 2 (23) 1 (24) 2 (25) 3*
*(26) 1. தர்ம சக்கரம் 2. நெற்கதிர் 3. தாமரையிலை*
*4. வாளேந்திய சிங்கம் 5. சந்திரன் 6. சூரியன் 7. பூரண கும்பம்*
*(27) 15.00 (28) 600 (29) 260 (30) 57 (31) 3*
*(32) 2 (33) 2*
(34) 1. Tree 2. Fruit 3. Flower 4. Beautiful 5. Hungry 6. My
*(35) 1. நான் 2. பாடசாலை 3. வீடு 4. அம்மா 5. அப்பா 6. அண்ணா*
*(36) 3 (37) 1 (38) 2 (39) 1) 2, 2) 2, 3) 1 (40) 3 (41) 3*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டு விழா

யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில்
க.பொ.த(சா/த) சித்தியடைந்த
17 மாணவர்களையும், தரம் 5 சித்தியடைந்த
5 மாணவர்களையும் பாராட்டி வாழ்த்தும்
வைபவம் இன்று (06.06.2007) புதன்கிழமை
நண்பகல் 12 மணியளவில் பாடசாலை
மண்டபத்தில் நடைபெறும்.

(61310) பழைய மாணவர் சங்கம்.

## சேவை நயந்து வாழ்த்துகின்றோம்



எமது கல்லூரியில் உபஅதிபராகப்
பணியாற்றி பதவியில் உயர்ந்து
யா/அருணோதயாக் கல்லூரியின்
அதிபராய் மிளிரும்

**நா.கேதீஸ்வரன்**

அவர்களைப் பாராட்டி விழா எடுக்கும்
இந்நாளில் அவரது சேவை மேலும்
சிறப்புற வாழ்த்துகின்றோம்.

(61328)

யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி, சண்டிலிப்பாய்.

அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா அலுவலர்கள்,
பாடசாலை அபிவிருத்திச்சங்கம்.

தெல்லிப்பழை வாலிபர் ஐக்கிய சங்க சனசமூக நிலையம்
தபால் கந்தோர் அருகாமை, தெல்லிப்பழை.

### 64 ஆவது ஆண்டுவிழா
### 06-06-2007

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2006 ஆம் ஆண்டு க.பொ.த.(சா/த) சித்தியடைந்து க.பொ.த.(உ/த.) கல்வி கற்கும் மாணவர்களை மென்மேலும் சிறப்புற மனமார வாழ்த்துகின்றோம்.

1) செல்வி பிரியதர்சினி - செல்லத்துரை
2) செல்வி டிலோஜினி - சின்னத்துரை
3) செல்வன் செல்வராசா - ரஜிந்தன்
4) அன்ரன் தேவபாலன் - சாள்ஸ்

**வாலிபர் ஐக்கிய சங்க சனசமூக நிலையம்,**
**யுத் யூனியன் விளையாட்டுக்கழகம்.**

(சி/52555) **தெல்லிப்பழை.**

## காணி விற்பனைக்கு

அளவெட்டி வடக்கு, மெயின் றோட்டில்
4½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(சி/52544) தொடர்பு: 4949234

### இறைச்சிக் கோழிக் குஞ்சு விற்பனைக்கு உண்டு

10 நாள் குஞ்சு 200/=
05 நாள் குஞ்சு 150/=
தொடர்பு: சிற் விநாயகர் ஸ்ரோஸ், ஆனைக்கோட்டை ந்தி.
(61291) தொ.பே.: 0776138978

## திருமணப்பணி

**மணப்பொருத்தம், மணப்பொருத்தப் பணி**
**பொருத்தமான திருமணங்களை**
**எதிர்பார்ப்பவருக்கான பணி**

1. சகல விதமான தொடர்புகளும் பெற்றோர், உடன்பிறந்தோர், இரத்த உறவு அல்லது நெருங்கிய பாதுகாவலருடன் மட்டுமே
2. வரவேண்டிய நேரம் திகதிகளை முன்கூட்டியே தொடர்புகொண்டு உறுதி செய்து கொண்ட பின்னர் வருவது விரும்பத்தக்கது. தொடர்பின் போது கேட்கப்படும் தகவல்களை மட்டும் தரவும்.
3. முன்னறிவித்தலின்றி வருபவர்களுடன் எதுவித தொடர்புகளும் சாத்தியமற்றவை. தயவுசெய்து அலைச்சல்களைத் தவிர்க்கவும்.

அழைப்பு 2229334
முற்பகல் 8.00-2.00, 3.00-6.00-7.00-9.00

**அருள்முருகன் திருமணப் பணியகம்**
(பதிவு செய்யப்பட்டது)
யாழ்.வீதி, யாழ்ப்பாணம்.
(61335)

உ
சிவசக்திமயம்

## ஷஷ்டியப்த பூர்த்திவிழாவும் நூல்வெளியீடும்

கோப்பாய் தெற்கு வீரபத்திரர்
கோயிலடியைச்சேர்ந்த
**சிவஸ்ரீ சி.ஜோதீந்திரக்குருக்கள்**
**ஸ்ரீமதி.ஞானப்பூங்கோதை**
தம்பதிகளின்
ஷஷ்டியப்த பூர்த்திவைபவமும்
''ஆத்மார்த்த சிவபூஜா பத்ததி''
நூல்வெளியீடும் நடைபெறவுள்ளன.

காலம் : 06-06-2007 புதன்கிழமை
இடம் : 'சரஸ்வதிவாசம்'
கோப்பாய் தெற்கு, கோப்பாய்

அனைவரையும் கலந்து
சிறப்பிக்குமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

திருமதி
### அப்பாத்துரை செல்வவதி

சித்தன்கேணி, சிவன்கோயிலடியைச் சேர்ந்த திருமதி அப்பாத்துரை செல்வவதி இந்தியாவில் 01.06.2007 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - திலகவதி தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்ற டாக்டர் அப்பாத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற அருணாசலம், விவேகானந்தன் (ஓய்வுபெற்ற முகாமையாளர்- இலங்கை வங்கி), இராமநாதன் (அமெரிக்கா), சர்வேஸ்வரி, பரமேஸ்வரி (ஓய்வு பெற்ற ஆசிரியை), கனகாம்பிகை, காலஞ்சென்ற சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பாஸ்கரன் (கனடா), திவாகரன் (கனடா), சிறீகரன் (கனடா), சிவகரன் (கனடா), வசீகரன் (இந்தியா), மீனாம்பாள் (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தாயும் கங்காதேவி (கனடா), மேகலா (கனடா), ஜனனி (கனடா), உமா (கொழும்பு), அன்பழகன் (இந்தியா) ஆகியோரின் மாமியும் நிரூஜன், அனித்தா, கஜன், தாரணி, தர்சிகன், மதுரா, மிதிலன், சாய்ருஷன், ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06.06.2007 புதன்கிழமை இந்தியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**வசீகரன்** (மகன்-இந்தியா),
**மகன்மார்** (கனடா).
தொ.பே: 9052090790

(61339)

### சுப்பிரமணியம் கிருஷ்ணபிள்ளை



வசாவிளானைப் பிறப்பிடமாகவும் பெரியவிளான் இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கிருஷ்ணபிள்ளை 01-06-2007 அன்று கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் சுப்பிரமணியம் - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும், குணபாக்கியம் (வதனா) அவர்களின் அன்புக் கணவரும் மயூறன், ஜெயகௌரி (கனடா), வசந்தன் (கனடா), ஆகியோரின் அன்புத் தந்தையும் கௌரிசங்கர் (கனடா), திருமகள் ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06-06-2007) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கேணிப்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*பெரியவிளான்,*
*இளவாலை.* (61340)
மனைவி,பிள்ளைகள்,
மருமகன், மருமகள்.

## முதலாம் ஆண்டு ஞாபகார்த்த நன்றி செலுத்தும் ஆராதனை



### திருமதி கிறேஸ் தவமணி எட்வேட் சண்முகம்

பிறப்பு: 05*10*1934 இறப்பு: 06*06*2006

*அன்பின் ஓர் ஆலயமென*
*தவமணி தவமணி என கணவர் சொல்வதையும்*
*அக்கா, அம்மா, அம்மம்மா, அப்பம்மா,*
*மாமி என உற்றார், உங்களை*
*அழைப்பதையும் மறவோம் தாயே.*
''ஸ்திரிகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப் பெற்றவள் நீயே''

இன்று(06.06.2007) புதன்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறும் நன்றி செலுத்தும் ஆராதனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

*ஏழாலை மத்தி, ஏழாலை.* (61317) குடும்பத்தினர்.

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### வல்லிபுரம் முருகையா

(ஓய்வு பெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்)
திதி: ஷஷ்டி

ஆண்டுகள் எட்டு ஓடி மறைந்தாலும்
எம் இதயங்களில் குடி இருக்கும் அன்பு
அப்பாவே!
உங்கள் நினைவுகள் என்றும்
எம்மை விட்டுப் பிரியாது.

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 05-09-1947 | 05-06-1999 |

'ஆனந்தவாசம்'
மஞ்சத்தடி தெற்கு,
இணுவில். (61299)

உங்கள் பிரிவால் துயருறும்:
**மனைவி, மக்கள்**

## நீங்காத நினைவஞ்சலி

நாற்பதாம் ஆண்டு



அமரர்
**கனகசபை கணபதிப்பிள்ளை**
(பிரபல வர்த்தகர்)

| அன்னை மடியில் | இறைவன் அடியில் |
|---|---|
| 01-10-1926 | 17-06-1967 |

திதி: ஆனிபூர்வபட்சத் தசமி
25.06.2007

முதலாம் ஆண்டு



திருமதி
**சௌந்தரம் கணபதிப்பிள்ளை**

| அன்னை மடியில் | இறைவன் அடியில் |
|---|---|
| 27-11-1928 | 18-05-2006 |

திதி: வைகாசி அபரபட்சஷ்டி
06.06.2007

வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டிய அன்புத் தெய்வங்களின்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

5ஆம் வட்டாரம்,
நயினாதீவு. (61260)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### திருமதி தில்லைமலர் பசுபதி

(முன்னாள் ஆசிரியை, இராமநாதன் கல்லூரி)

உடுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தில்லைமலர் பசுபதி நேற்று (05.06.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலம் சென்றவர்களான முன்னாள் உடுவிற் பகுதி பொலிஸ் விதானை ச.சின்னையா - மாணிக்கம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற மு.பசுபதி (பிரதம கணக்காளர் சுங்கத் திணைக்களம்) அவர்களின் பிரிய பத்தினியும், திருமதி சகலகலாவல்லி (Canada), திருமதி சித்திரகலா (Newzealand) உமாசுதன் (கணக்காளர் - Botswana) திருமதி சிவசக்தி (Canada) ஆகியோரின் பாசமிகு தாயும், கருணாகரன் (பொறியியலாளர் - Canada), லோகேஸ்வரன் (பொறியியலாளர் -Newzealand), ஷாமினி (கணக்காளர் - Botswana), றூபன் (கணக்காளர் - Canada) ஆகியோரின் மாமியும், திருமதி க.தங்கரத்தினத்தின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற அ.கந்தசாமி (முன்னாள் அதிபரும், பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளரும்) அவர்களின் மைத்துனியும், கிருஷ்ணானந், கர்ணன், லக்ஷ்மி, வைஷ்ணவி, துவாரகன், மைத்திரேயி, ரிஷிகேஸ், ஹம்சிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், திருமதி கௌரி சிவராஜசுந்தரம் (முன்னாள் ஆசிரியை மானிப்பாய் மகளிர் கல்லூரி), க.சிவாஜி (அதிபர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சிறிய தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (06.06.2007) புதன்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 2.30 மணிக்கு பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**க.சிவாஜி** (பெறாமகன்)
(அதிபர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி- சுன்னாகம்).

*உடுவில் மேற்கு,*
*சுன்னாகம்.* (61333)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்விச் சுடர் 02

## தரம் 5 மாணவர்களுக்கான
## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்

ஆக்கம்:- பி. அம்பிகைபாகன் - கொழும்பு

### வினாத்தாள் - II

01. கொடுக்கப்பட்ட பந்தியை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

வருடாவருடம் 14 அல்லது 15 ஆம் திகதி மட்டில் சித்திரைப் புத்தாண்டு பிறக்கின்றது. இது தமிழருக்கு மட்டுமல்ல சிங்களவர்களுக்கும் புத்தாண்டாக இருப்பது ஒரு சிறந்த அம்சமாகும். இரு இனங்களுக்கும் இடையில் உள்ள பல ஒற்றுமைகளுக்கு இதுவும் ஒரு சான்றாகும். புத்தாண்டு பிறந்ததும் தமிழ் மக்கள் மருத்துநீர் வைத்து நீராடி புத்தாடை அணிந்து கோயிலுக்குப் போய்வருவார்கள்.

பலகாரங்களோடு சேர்ந்த அறுசுவை உணவுகளைப் பரிமாறிக் கொள்வார்கள். எக்கருமங்களைச் செய்தாலும் நல்லநேரம் பார்த்தே செய்வார்கள். முக்கியமாக கைவிசேடம் வழங்குதல் சிறந்த நேரத்திலேயே இடம்பெறும். உறவினர் வீடுகளுக்கும் நல்ல நாள் பார்த்தே செல்வர். மாணவர்கள் சகபாடிகளின் வீடுகளுக்குச் செல்வர்.

1. தமிழர் புத்தாண்டு எப்போது பிறக்கும்?
..............................
2. 2008 ஆம் ஆண்டு எப்போது பிறக்கும்?
..............................
3. ஏப்ரல் 14 அல்லது ஏப்ரல் 15 ஆம் திகதியில் பிறக்கும் புத்தாண்டின் சிறப்பம்சம் என்ன?
..............................
4. சிங்களவர், தமிழர்களுக்கு இடையில் உள்ள ஒற்றுமைக்குவேறு ஒரு சான்று தருக?
..............................
5. சாதாரண நாட்களில் நீராடுவதற்கும் புத்தாண்டில்நீராடுவதற்கும் உள்ள வேறுபாடு என்ன?
..............................
6. புத்தாண்டில் நல்ல நேரம் பார்த்துச் செய்யும் நிகழ்ச்சிகள் இரண்டு தருக?
..............................
7. ''மருத்துநீர்'' எனும் சொல்லைப் பிரித்து எழுதுக.
..............................
8. ''உறவினர்'' என்ற சொல்லுக்கு ஒத்த சொல் ஒன்று தருக.
..............................
9. ''செய்வார்கள்'' என்ற வினைமுற்று நிகழ்காலமா? அல்லது எதிர்காலமா?
..............................
10. ''சகபாடிகள்'' என்போர் யாவர்?
..............................

02. பின்வருவனவற்றிற்கு ஒத்த கருத்துடைய சொற்களை எழுதுக.
1.கங்குல் ..............................
2.பார் ..............................
3.உபாத்தியாயர் ..............................

03. பின்வருவனவற்றிற்கு எதிர்க் கருத்துடைய சொற்களை எழுதுக.
1.தண்மை ..............................
2.செறிவு ..............................
3.சொர்க்கம் ..............................

04. சரியான விடையின் கீழ்க் கீறிடுக.
1.பொருட்களின் அதிர்வினால் உண்டாவது
1)வெப்பம் 2)ஒளி 3)ஒலி 4)மின்

2.பனிக்கட்டி நீராக மாறும் போது நடைபெறுவது
1)ஆவியாதல் 2)கரைதல் 3)ஒடுங்குதல் 4)உறைதல்

3. இரைமீட்கும் விலங்கு எது?
1)கிளி 2)பூனை 3)புலி 4)மாடு

4. பறக்கும் பாலூட்டி எது?
1)வெளவால் 2)கழுகு 3)காகம் 4)பருந்து

5. பக்கவேர்களில் உணவு சேமிக்கும் தாவரம்
1)கரும்பு 2)கரட் 3)கச்சான் 4)கத்தரி

6. நீரின் முலம் பரவும் வித்து
1)முருங்கை 2)தேங்காய் 3)பனை 4)எருக்கலை

7. வெப்பத்தினால் விரிவடையக் கூடியது
1)இரும்பு 2)இறப்பர் 3)கல் 4)மண்

8. எமது நாட்டின் பெருந்தோட்டப் பயிர்களில் ஒன்று
1)கறுவா 2)தேயிலை 3)ஏலம் 4)கராம்பு

9. அண்மையில் நடைபெற்றுமுடிந்த உலகக் கிண்ண கிரிக்கற் போட்டியில் சம்பியன் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்ட நாடு
1)இலங்கை 2)இங்கிலாந்து
3)அவுஸ்ரேலியா 4)பாகிஸ்தான்

10.நிறைபுரத உணவு வகை
1)பால் 2)கருவாடு 3)பாண் 4)சோறு

05. பின்வரும் வீதிக்குறியீடுகளை அடையாளம் கண்டு தரப்பட்ட புள்ளிக்கோட்டில் எழுதுக.




1) .................. 2) .................. 3) ..................
4) .................. 5) .................. 6) ..................

06. மிகச்சரியான சொற்களை வைத்து இடைவெளியை நிரப்புக.
1. பாம்பு சீறும் என்பது போல சிங்கம்
..............................
2. மாடு கட்டும் இடம் தொழுவம் என்பது போல குதிரை கட்டும் இடம்
..............................
3. வைக்கோல்களின் தொகுதி கற்றை என்பது போல புகையிலையின் தொகுதி
..............................
4. பனையின் இளங்காய் நுங்கு என்பது போல மாவின் இளங்காய்
..............................
5. ஆட்டின் மலம் பிழுக்கை என்பது போல யானையின் மலம்
..............................
6. நெல்லின் உள்ளீடு அரிசி என்பது போல பலாவின் உள்ளீடு
..............................
7. யானை செலுத்துபவன் பாகன் என்பது போல ஆடு மேய்ப்பவன்
..............................
8. ஐம்பது ஆண்டுப் பூர்த்தியினைக் கொண்டாடும் விழா
..............................
9. மாலையில் கூடும் சந்தை
..............................
10. உலகிலேயே பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நூல்
..............................

07. அருகே காட்டப்பட்டுள்ள அரச இலச்சினையை நன்கு அவதானித்து அதிலுள்ள ஒவ்வொரு உருவமும் எதை உணர்த்துகிறது என்பதைத் தெளிவாக எழுதுக.



1.சிங்கம் : ..............................
2.தாமரை இலை : ..............................
3.புன் கலசம் : ..............................
4.சூரியனும்சந்திரனும் : ..............................

5. இன்று பயன்படுத்தப்படும் அரச இலச்சினை எப்போது அறிமுகப்படுத்தப்பட்டது?
..............................
6. அரச இலச்சினையை உருவாக்கியவர் யார்?
..............................

08. கீழே தரப்படும் அறிவித்தலை நன்கு வாசித்து வினவப்படும் வினாக்களுக்குரிய சரியான விடையைப் புள்ளிக்கோட்டில்எழுதுக.

#### அறிவித்தல்

மிகப்பிரபலமான அற்லஸ் புத்தக வெளியீட்டு நிறுவனத்தின் சுற்றுப்புறச்சூழல் தற்போது அசுத்தமான பிரதேசமாக மாறியுள்ளமை அனைவரும் அறிந்ததே. இதனை யாரும் கவனத்தில் கொள்வதாக எமக்குத் தெரியவில்லை. நுளம்புகளினால் பெருகிவரும் நோய்கள் மிகவேக மாகப் பரவி வரும் இன்றைய காலகட்டத்தில் சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக பேணிக்காக்க வேண்டியது இன்றியமையாததும் எமது கடமையுமாகும். எமது நிறுவனத்தின் சூழலில் வாழும் பொது மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு சுற்றுப்புறச் சூழலை சுத்தப் படுத்துவதற்காக எதிர்வரும் 03.06.2007 (ஞாயிற்றுக் கிழமை) அன்று சிரமதானப்பணி ஒன்றை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளோம். இதற்கு ஊழியர்களின் அனைவரினதும் பூரண ஒத்துழைப்பை வேண்டி நிற்கின்றோம்.

01.06.2007

இப்படிக்கு,
நிர்வாகத்தினர்

1. இந்த அறிவித்தலின் நோக்கம் என்ன?
..............................
2. இவ்வறிவித்தலை அறிவித்தவர் யார்?
..............................
3. சிரமதானப் பணியை மேற்கொள்ளும் நிறுவனம் எது?
..............................
4. சிரமதானத்திற்காக யாருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது?
..............................
5. இங்கு சுட்டிக்காட்டத் தவறப்பட்டுள்ள அமைச்சு எது?
..............................
6. ''சுத்தம் சுகம் தரும்'' என்ற பழமொழியின் கருத்து என்ன?
..............................

09. தரப்பட்டுள்ள எண்கோலங்களைப் பூரணப்படுத்துக.

1.
(1) மேல் 3; நடு 12; கீழ் 8, 5
(2) மேல் 5; நடு 16; கீழ் 12, 7
(3) மேல் 7; நடு 20; கீழ் 16, 9
(4) மேல் 9; நடு 24; கீழ் ..., ...

2.
| | (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|---|
| மேல் | 4 | 2 | 5 | ... |
| கீழ் | 5, 8 | 3, 4 | 6, 10 | 2, 2 |

3.
| | (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|---|
| மேல் | 16, 18 | 20, 22 | 24, 26 | 28, 30 |
| கீழ் | 3, 5 | 7, 9 | 11, 13 | ..., ... |

10. கீழ்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்க விடை எழுதுக.

யாழ் நகரம் எங்கள் நகரம்
யாரும் விரும்பும் அழகு நகரம்
பனை மரங்கள் சூழ் நகரம்
பாரோர் என்றும் போற்றும் நகரம்


பண்ணைத் துறைக் கடற்கரையும்
பாசையூர்த் துறைமுகமும்
மீனாய்ச் சொரிந்திடவே
மிக வளமாய்க் கொள் நகரம்

இலங்கையின் வட நகரம்
நல்ல வளமும் நிறை நகரம்
அறிவில் மிகுந்தோர் வாழ்
அருமையான குடா நகரம் (குடா நாடு)

1. எங்கள் என்பது யாரைக் குறிக்கும்?
..............................
2. யாழ் நகரைச் சூழ உள்ள கிராமங்களில் காணப்படும் மரங்கள் யாவை?
..............................
3. பாரோர் என்பதற்கு ஒத்த சொல் தருக.
..............................
4. யாழ் நகரின் மிகுந்த வளம் என்ன?
..............................
5. யாழ் நகரைச் சூழ்ந்துள்ள இரு கடற் கரையின் பெயர்களைத் தருக?
..............................
6. இலங்கையின் எந்தப் பகுதியில் யாழ் நகரம் உள்ளது?
..............................
7. யாழ் நகர மக்கள் எப்படிப்பட்டவர்கள்?
..............................
8. மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்டு ஒரு பக்கம் நிலத்தோடு தொடர்புடையது எது?
..............................
9. யாழ் நகரில் பெரும்பான்மையாக வாழும் மக்கள் எம்மதத்தைச் சாரந்தவர்கள்?
..............................

11. 1. 5 மீற்றர் 0.25 சென்ரி மீற்றரை மீற்றரில் தருக
..............................
2. 0.978 ஐ விஞ்ஞான முறைக் குறியீட்டில் எழுதுக.
..............................
3. 3, 9, 27, ............ அடுத்துவரும் எண்யாது?
..............................
4. 1 1/5, 1/5, 2 1/5, ........ எனும் தொடரை இறங்குவரிசையில் எழுதுக.
..............................
5. 0.1 +, 0.25 + 0.0001 தரப்பட்டவற்றைக் கூட்டி எழுதுக.
..............................
6. இரண்டு கிலோ சீனியின் விலை 98.00, அப்பிள் ஒன்றின் விலை 15.00 எனின், 5500 கிராம் சீனியினதும் 12 அப்பிள்களினதும் மொத்தப் பெறுமதி யாது?
..............................
7. ஒரு தேசிய பாடசாலையின் வகுப்பு ஒன்றிலுள்ள மாணவர்களின் சாசரி எண்ணிக்கை 125 எனின் அப்பாடசாலையின் தரம்-1முதல் தரம்-13 வரையுள்ள வகுப்புக்களில் உள்ள மாணவர்களின்மொத்த மாணவர் தொகை யாது?
..............................

12. பின்வரும் வாழ்க்கைவட்டப் பருவங்களை ஒழுங்காக எழுதுக.




1) ..............................
2) ..............................
3) ..............................
4) ..............................
5) ..............................

13. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| பொருட்கள் | விலை (ரூ.சதம்) | அளவு (கிலோகிராம்) | மொத்தப் பெறுமதி (ரூ.சதம்) |
|---|---|---|---|
| 1. சீனி | 48.00 | 2 1/2 | ............ |
| 2. பருப்பு | 82.00 | 5 1/4 | ............ |
| 3. கரட் | 75.00 | 1 1/2 | ............ |
| 4. உருளைக் கிழங்கு | 45.00 | 3 1/4 | ............ |
| 5. மிளகாய் | 93.00 | 1 3/4 | ............ |
| 6. வெங்காயம் | 47.00 | 2 3/4 | ............ |

14. '' வனவளத்தைப் பாதுகாப்போம்'' எனும் தலைப்பில் சரியான எழுவாய், பயனிலைகளுடன் ஆறு வசனங்கள் எழுதுக. ஒரு வசனம் நான்கு சொற்களைக் கொண்டிருக்க வேண்டும்.
..............................
..............................
..............................
..............................
..............................
..............................

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sri Lanka Insurance
Corporation Ltd

# திறப்பு விழா

வடமராட்சி மக்களுக்கோர் வரப்பிரசாதம்:-

உங்கள் காப்புறுதியின் முன்னோடியான இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் 07-06-2007இல் இருந்து வடமராட்சி மக்களுக்கு அவ்விடத்திலேயே தனது சேவையை வழங்கவுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.



முகவரி :- பிரதான வீதி (மக்கள் வங்கி முன்பாக),
நெல்லியடி,
தொலைபேசி இலக்கம் :- 021 2264686

முகாமையாளரும் ஊழியர்களும்,
இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்,
நெல்லியடி.

குறிப்பு:- இலங்கைக் காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் அலுவலகங்கள் யாழ்ப்பாணத்தில் வீரசிங்கம் மண்டபத்திலும் நெல்லியடியில் மக்கள் வங்கி முன்பாகவும் மட்டுமே இயங்குகின்றன என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம்.

(61357)

## புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சர்வசித்து வருஷம் இன்று(06-06-2007) புதன்கிழமை காலை 7 மணிமுதல் 8.15 மணிவரை மிதுனலக்கினமும் சித்தயோகமும் திருவோண நட்சத்திரமும் கூடிய சுபவேளையில்

### "சிறி குமரன்ஸ் நகையகம்"

எனும் ஸ்தாபனத்தை இறைவன் திருவருள் துணைகொண்டு ஆரம்பிக்க இருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் வருகை தந்து விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

177/ G, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

ம.சுரேஸ்குமார்
(சுரேஸ்).

(61336)

## பதவி வெற்றிடம்

Sri Lanka Insurance

07-06-2007 வியாழன் நெல்லியடியில் திறக்கவுள்ள இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் கிளைக்கு புதிதாக முகவர்கள் நியமிக்கப் படவுள்ளனர். 18 வயதிற்கு மேற்பட்ட G.C.E.(O/L) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்த இருபாலரும் விண்ணப்பிக்கலாம். தகுதியானவர்கள் எதிர்வரும் 11-06-2007 காலை 9 மணிமுதல் மதியம் 12 மணிவரை சுயவிவரக் கோவையுடன் நெல்லியடிக் கிளைக்கு நேரில் சமூகம் தரவும் .

குறிப்பு: * யாழ் கிளைக்கான முகவர் தெரிவு 09-06-2007 மு.ப.9 .00-பி.ப.12.30 மணி வரை யாழ்.கிளையில் நடைபெறவுள்ளது.
* பகுதிநேரமாக இணைய விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.

பிரதான வீதி,
மக்கள் வங்கி முன்பாக,
நெல்லியடி,
தொ.பே. 021 226 4686
0777563781

வீரசிங்கம் மண்டபம்,
கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 2023
0773863753

(61352)

## ஆண்கள் விடுதி மேற்பார்வையாளர் பதவி வெற்றிடம்

தகைமைகள்: குறைந்தது க.பொ.த(சா/த) சித்தி.
50 வயதுக்கு மேற்பட்டவர்கள் நல்லொழுக்கம் - முன் அனுபவம், முன்னுரிமை, விடுதியில் தங்கவேண்டும்.

விண்ணப்ப முடிவுதிகதி: 12-06-2007

விண்ணப்பிக்க வேண்டிய விலாசம்:

தலைவர்,
ஸ்ரீ பரமானந்தா சிறார் முதியோர் இல்ல ஆச்சிரமம்,
வதிரி , கரவெட்டி.

தலைவர், தர்மகர்த்தாக்கள் சபை.

(சி/52556)

## மாடிக்கட்டடம் வாடகைக்கு

சுன்னாகம் நகரப் பகுதிக்கு அண்மையில் கே.கே.எஸ்.வீதியில் அமைந்த இருமாடிக் கட்டடம் (3600 சதுர அடி) வாடகைக்கு விடப்படும். அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
பொ.நடேசன்,
இல.136, கே.கே.எஸ். வீதி,சுன்னாகம்.

(61342)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 இல் பிறந்த கேட்டை நட்சத்திரம் செவ்வாய் சனி இலக்கினத்தில் உள்ள, உயரம் 5'6' Bsc (Applied Accounting), ACCA. சிங்கப்பூரில் KPMG நிறுவனத்தில் Accountant ஆகப் பணிபுரியும் மகனுக்கு பெற்றோர் ஆங்கில அறிவுள்ள பட்டதாரி (கணக்கியல், கம்பியூட்டர்) மணமகளை [illegible]

T.P.:021 [illegible]
பொற்பதி வீதி, கொக்குவில்.

ஓம் விராட் விஷ்வப் பிரமனே நம

## நினைவலைகள்

**9 ஆம் மாத நினைவு நாள்** | **31ஆம் நாள் நினைவுநாள்**



திருமதி
குணரட்ணம் சுசீலா

தோற்றம் 19-10-1963 மறைவு 04-09-2006
திதி: ஏகாதசி



அமரர்
வேலுப்பிள்ளை அப்புத்துரை (ஆச்சாரியார்)

தோற்றம் 23-08-1925 மறைவு 06-05-2007
திதி: பஞ்சமி

கடந்த 06-05-2007 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் வேலுப்பிள்ளை அப்புத்துரை அவர்களின் சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (06-06-2007) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளன. அன்றைய தினம் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய [illegible]ம் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

[illegible] தெற்கு, (61343)

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இந்தியாவைத் திருப்திப்படுத்துகின்ற இராஜதந்திரம் கொழும்பிடம் இல்லை

தேர்தல் காலத்தில் ஆதரவு தர முன்வரும் தரப்புகளை எல்லாம் வளைத்துப் போடுவதற்காக, அத்தரப்புகள் முன்வைக்கும் நிபந்தனைகள் அனைத்தையும் - கொள்கை, கோட்பாடுகள், சித்தாந்தங்கள் பற்றிச் சிந்திக்காமல் - ஏற்றுக்கொள்வது போல தலையாட்டி, கையெழுத்திட்டு செப்படி வித்தை காட்டுவது வேறு.

உலகளாவிய ரீதியிலான சர்வதேச அரசியலைக் கையாள்வது வேறு.

அதிகாரத்துக்கு வருவதற்காக - ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக - எல்லாவற்றுக்கும் தலையாட்டிவிட்டு, அதிகாரத்துக்கு வந்த பின்னர், பழைய வாக்குறுதிகளைக் காற்றோடு பறக்கவிடும் விட்டேத்திப் போக்கு, சர்வதேச அரசியலைக் கையாள உதவப் போவதில்லை என்பது இலங்கையின் அரசுத் தலைவருக்கு இப்போது மெல்ல, மெல்லப் புரிய ஆரம்பித்திருக்கும் என எதிர்பார்க்கலாம்.

ஜாதிக ஹெல உறுமயவையும், ஜே. வி. பியையும், அத்தரப்பில் உள்ளடங்கிய தென்னிலங்கை பௌத்த - சிங்களப் பேரினவாதக் குழுமத்தையும் தலையாட்டி, கண்ணை மூடிக் கொண்டு ஒப்பந்தம் செய்யவைத்து, வலையில் வீழ்த்தும் உள்ளூர் அரசியல் தந்திரம், இந்தியா போன்ற அயல் வல்லாதிக்க நாடுகளைக் கையாளும் சர்வதேச அரசியல் இராஜதந்திரத்துக்கு பொருந்தியே வரமாட்டாது என்பது ஜனாதிபதி மஹிந்தருக்கு புதுடில்லியால் 'நல்ல முறையில்' பாடமாக உணர்த்தப்பட்டிருக்கின்றது என்கின்றன அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தாம் இலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் மூன்று தடவைகள் புதுடில்லிக்குப் போய் வந்துவிட்டார். ஒவ்வொரு தடவையும் இந்திய அரசின் மூத்த அதிகாரிகளுடன் அவர் விரிவான பேச்சுகளில் ஈடுபட்டு வந்திருக்கிறார்.

தவிரவும், இந்திய வெளிவிவகார அமைச்சர் ஒரு தடவையும் வெளிவிவகாரச் செயலாளர்கள் இரு தடவைகளும் கொழும்புக்கு வந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தியிருக்கின்றனர்.

இவ்வாறு ஆறு தடவைகளுக்கு மேல் ஜனாதிபதி மஹிந்தருடன் தாம் நடத்திய தொடர் பேச்சுகளின் போக்கு, அப் பேச்சுகளில் ஜனாதிபதி மஹிந்தர் பேணிய முன்னுக்குப் பின் முரணான நிலைப்பாடு, அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவு செய்வதில் அவரது அரசு வெளிப்படுத்திய நம்பகத்தன்மை போன்றவை புதுடில்லியை ஏற்கனவே ஆழ்ந்த அதிருப்திக்குள் மூழ்கடித்திருந்தன என்பது சாடைமாடையாக வெளிப்பட்ட விவகாரம்தான்.

வடக்கு - கிழக்கு இணைப்பை உறுதிப்படுத்துதல் உட்பட கணிசமான அதிகாரப் பகிர்வுத் திட்டத்தை அரசுத் தரப்பினால் முன்வைப்பது வரையிலான பல்வேறு உறுதிமொழிகள் காலத்துக்குக் காலம் நலிவடைந்து அடிபட்டுச் சென்ற பின்னணியில், இந்திய அதிகார வர்க்கத்தின் சீற்றம் நீறு பூத்த தணலாக அமுங்கிக் கிடந்ததை இராஜதந்திர வட்டாரங்கள் அவ்வப்போது நினைவூட்டத் தவறியதில்லை.

அந்த நெருப்பின் தகிப்பும் அதன் வெம்மையும் ராஜபக்ஷ நிர்வாகத்துக்கு இப்போது புதுடில்லியால் சற்று சூடாக உணர்த்தப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

சொல் ஒன்றும், செயல் வேறாகவும் நடிக்கும் இழுபறிப் போக்கைத்தான் எண்பதுகளின் முற்பகுதிகளில் அரசியல் தந்திரத்தில் கிழட்டு நரியான ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் புதுடில்லியோடு விளையாடிப் பார்த்தார். ஆனால் 'ஒபரேஷன் பூமாலை' மூலம், அதுவரை பொருளாதார, போக்குவரத்து முற்றுகைக்குள் காய்ந்து கிடந்த தமிழர் தாயகம் மீது இந்திய விமானப்படை விமானங்கள் நிவாரண உதவிகளைப் போட்டபோதுதான் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா தமது குள்ளநரி அரசியல் தந்திரம் புதுடில்லியிடம் வேகவில்லை என்பதை உணர்ந்து, ஒரே கணத்தில் புதுடில்லிக்கு அடிபணிபவரானார்.

தெரிந்தோ, தெரியாமலோ அதே போன்ற விட்டேத்திப் போக்கையே புதுடில்லி உறவைக் கையாளும் விவகாரத்தில் பின்பற்றி மஹிந்த ராஜபக்ஷவின் நிர்வாகமும் - ஜே. ஆர். ஜெயவர்த்தனா போல - வாங்கிக் கட்டத் தயாராகி வருவதாகத் தோன்றுகின்றது.

இலங்கை இனப்பிரச்சினையை அமைதி வழியில் - சமாதான முறையில் - தீர்ப்பதற்கான வாய்ப்புக்களை, உதாசீனப்படுத்தி -

இது தொடர்பான இந்திய ஆலோசனைகளை செவிமடுப்பது போல தலையாட்டிப் பின்னர் புறக்கணித்து -

ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பதாக உறுதியளித்து விட்டு, பின்னர் அவற்றை நிறைவு செய்யாமல் காலத்தை இழுத்தடித்து ஏமாற்றி -

தனது இராணுவத் தீர்வு நிகழ்ச்சி நிரலை கனகச்சிதமாக நிறைவு செய்யும் அந்தரங்கத் திட்டப்படி, அயல் வல்லாதிக்க சக்தியான இந்தியாவையும் மீறி, பாகிஸ்தானையும், சீனாவையும் இந்தக் குட்டித் தீவுக்குள் அகலக்கால் வைக்கக் கூடியதாக இழுத்து வீழ்த்தும் 'மஹிந்த சிந்தனை'ப் போக்கு, புதுடில்லிக்கு கடும் எரிச்சலையும் சீற்றத்தையும் இயல்பாகவே ஏற்படுத்தி விட்டது என்பது அம்பலமாகி வருகின்றது.

புலிகளின் 'புறொப்லர்' விமானங்களைத் தாக்கி அழிப்பதற்காக என்று கூறி, சீன, பாகிஸ்தான் நாடுகளின் 'மிக் 29' நவீன குண்டு வீச்சு விமானங்களை இலங்கைத் தீவுக்குள் நிலைகொள்ள அனுமதிப்பது - இந்திய யுத்த விமானங்களுக்கும் அச்சுறுத்தலைத் தரக் கூடிய உயர் தொழில்நுட்பத் தாக்குதல் விமானங்களை அதன் நட்புறவற்ற நாடுகளின் துணையோடு அதன் தென்கோடி முனையில் இருக்க இடமளிப்பது - இந்தியாவைப் பொறுத்த வரையில் அற்ப விவகாரமல்ல: ஆழமான அர்த்தங்கள் பொதிந்த - புதைந்த - விடயம்.

'புலி விமான' பூச்சாண்டியைக் காட்டி, இந்தியாவுக்கு கிலியை ஏற்படுத்தும் நடவடிக்கையை மஹிந்தர் அரசு நாசூக்காக ஒப்பேற்ற முயல்வதாகவே புதுடில்லி கருதுகின்றது.

அதற்கான 'செக் - மேட்' நடவடிக்கைகளை - காய் நகர்த்தல்களை - புதுடில்லி ஏற்கனவே ஆரம்பித்து விட்டதாகவும் தகவல். இதைக் கொழும்பு புரிந்து கொண்டு இராஜதந்திரமாக - விவேகமாக - நடந்துகொள்ள வேண்டும். இல்லையேல் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா புதுடில்லியிடம் பட்டுத் தெளிந்தது போன்றதோர் பாடத்தை மஹிந்த ராஜபக்ஷ நிர்வாகமும் புதுடில்லியிடம் பட்டுத் தெளிய வேண்டி நேரும்.

### கட்சிகளின் எதிர்ப்புக்கு மத்தியில்

# தேர்தல் சீர்திருத்த அறிக்கை நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது

## விவாதமாக்க முடியாது என்றார் சபாநயகர்

கொழும்பு, ஜூன் 06

பிரதான எதிர்க்கட்சிகள் உட்பட அரசுக்கு ஆதரவு வழங்கும் சிறுபான்மைக் கட்சிகளினதும் எதிர்ப்புகளுக்கும் ஆட்சேபனைகளுக்கும் மத்தியில் தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பான நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் இடைக்கால அறிக்கை நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

தெரிவுக்குழுவின் தலைவரும் நகர அபிவிருத்தி அமைச்சருமான தினேஷ் குணவர்தன இந்த இடைக்கால அறிக்கையை சபையில் சமர்ப்பித்தார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா சம்பந்தன், ஸ்ரீல. மு. காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம், எதிர்க்கட்சிக் கொரடா ஜோசப் மைக்கல் பெரேரா ஆகியோர் தமது அதிருப்தியைத் தெரிவித்தனர். எனினும் இதனை ஒரு விவாதமாக்க முடியாது என்று சபாநாயகர் கூறிவிட்டார்.

அமைச்சர் தினேஷ் குணவர்தன இடைக்கால அறிக்கையை சமர்ப்பித்து உரையாற்றும்போது சொன்னதாவது:

• தற்பொழுது நடைமுறையில் உள்ள தேர்தல் முறையின் காரணமாக உறுதியான ஓர் அரசையோ அல்லது உறுதியான எதிர்க்கட்சி ஒன்றையோ அமைக்க முடியாதுள்ளது.

வாக்காளர்களுக்கும் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களுக்கும் இடையிலான நெருக்கம் துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால் விருப்பு வாக்கு முறைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

இதனால் தொகுதிவாரியாகவும், மாவட்ட விகிதாசார வாரியாகவும், கலப்பு முறையிலான தேர்தல்முறை அறிமுகப்படுத்தப்படும்.

**தொகுதிகளின் எல்லைகள் மீளமைப்பு**

தொகுதிவாரியாக 140 உறுப்பினர்கள் நேரடியாகத் தெரிவு செய்யப்படுவார்கள். இதற்கேற்ப தேர்தல் தொகுதிகளின் எல்லைகள் மீளமைக்கப்படும்.

மாவட்ட விகிதாசார அடிப்படையில் 70 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

தேர்தலில் போட்டியிட்டு தொகுதிவாரி உறுப்புரிமை பெற முடியாமல் தோல்வியடைந்த உறுப்பினர்கள் தனிப்பட்ட முறையில் வாக்குகளின் அடிப்படையில் இந்த 70 உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்படுவர்.

மாவட்டவாரியாக குறிப்பிட்ட அரசியல் கட்சிகள் தொகுதிவாரியாக பெற்ற வாக்குகளின் அடிப்படையில் விகிதாசாரப் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவர்.

மேலும் 15 பேர் தேசியப் பட்டியல் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படுவர். இதன் அடிப்படையில் 225 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள்.

இதே தேர்தல் முறை அடிப்படையிலேயே மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்குமான தேர்தல்களும் நடத்தப்படும்.

நாடாளுமன்றத்திற்கும் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கும் உறுப்பினர்கள் தெரிவு செய்யும் போது மூன்றுக்கு ஒருவர் பெண் உறுப்பினர்களுக்கு இடமளிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

மேலும் தபால் மூல வாக்குகள் முறை மாற்றி அமைக்கப்படும். திணைக்களத் தலைவர்களுக்குப் பதிலாக தேர்தல் ஆணையாளரின் பிரதிநிதியின் முன்னிலையில் வாக்குப் பதிவுகள் நடைபெறும். இதனால் சீர்கேடுகள் தவிர்க்கப்படும் என்றார் அமைச்சர் தினேஷ் குணவர்தன

(சி)

# நாம் சுதந்திரமாகக் கற்பதற்கு அரசுக்கு சர்வதேசம் அழுத்தம் கொடுக்க வேண்டும்

## தமிழ் மாணவர் ஒன்றியம் கோரிக்கை

சுதந்திரமாக நாம் கற்பதற்கு அரசு அனுமதிக்க வேண்டும். அதற்குரிய அழுத்தங்களைச் சர்வதேச சமூகம் அரசுக்கு வழங்கி, எமது உரிமைக் குரல் நசுக்கப்படுவதை நிறுத்த உதவ வேண்டும்.

இவ்வாறு தமிழீழ மாணவர் எழுச்சி நாள் குறித்து விடுத்த அறிக்கை ஒன்றில் தமிழ் மாணவர் ஒன்றியத்தின் யாழ்.மாவட்டப் பிரிவு கோரியுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ் மாணவர்கள் மீது திணிக்கப்பட்ட ஒடுக்குமுறைக்கு எதிராக கிளர்ந்தெழுந்து போராடி இறுதியில் தன்னைத் தானே மாய்த்து உயிர் நீத்த யாழ்.இந்து அன்னையின் தவப்புதல்வன் பொன்.சிவகுமாரனை நினைவு கூர்ந்து ஆண்டுதோறும் ஜூன் ஆறாம் திகதி மாணவர் எழுச்சி நாளாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

இன்றைய காலகட்டத்தில், தமிழ் மாணவர்கள் மீதான கல்வி ஒடுக்குமுறை தமிழ் மாணவர்களைப் பெரிதும் பாதித்துள்ளது.

தமிழ் மாணவர்களை அழிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த வகையில் இந்த வருடம் மாணவர் எழுச்சி தினம் முக்கியத்துவம் பெறுகின்றது.

பேரினவாதச் சக்திகளினால் பல்வேறு ஒடுக்குமுறை வடிவங்கள் உருவாக்கப்பட்டு, அவை தமிழ் மாணவர்களின் கல்வியை ஒடுக்க முயற்சிக்கின்றன. பல்வேறு வடிவங்களில் தமிழ் மாணவர்களின் கல்வியை நாசமாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த வருட நடுப்பகுதிக்குப் பின்னர் குடாநாட்டு மாணவர்கள் பெரும் இன்னல்களை எதிர்நோக்கி நிற்கின்றனர். பல மாணவர்கள் அரச பயங்கரவாதத்தின் கொடுமையை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் தமது எதிர்காலக் கல்வியைத் தொலைத்து நிற்கின்றனர்.

கடந்த ஓகஸ்ட் மாதத்தின் பின்னர் ஒன்பது மாணவர்கள் கடத்தப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். ஒருமாணவன் சித்திரவதைக்குப் பின் விடுவிக்கப்பட்டுள்ளார். ஆறு மாணவர்கள் தொடர்பாக இன்றும் தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

**கல்வியை இடை நிறுத்தி உள்ளனர்**

மாணவர்களுக்கு எதிராக வன்முறைகள் ஒருபுறம் தொடர, மறுபுறம் பஞ்சமும், பட்டினியாலும் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதன் காரணமாக பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் கல்வியை இடை நிறுத்தியுள்ளனர்.

என்றுமில்லாத துயரச்சுமையோடு இருக்கும் மாணவர்களாகிய நாம் எமது கல்வியினையோ, எமது விடுதலைத் தாகத்தினையோ அழித்துவிட முடியாது என்பதனை சிங்கள தேசத்துக்குத் தொடர்ந்தும் எடுத்துக் காட்டுவோம்.

எமது சுதந்திரமான கல்விக்காகப் பயணிக்கும் நாம் மிக விரைவில் அவற்றினைப் பெற்றுக் கொள்ளுவோம் என்ற உறுதியோடும், நம்பிக்கையோடும் முயற்சியுடன் கற்போம்.

எமது உணர்வுகள் மதிக்கப்படவேண்டும். எமக்கு உரிமைகள் கிடைக்கப்பட வேண்டும். நாம் சுதந்திரமாக கற்க அரசு அனுமதிக்க வேண்டும். இதற்குரிய அழுத்தங்களைச் சர்வதேசம் அரசுக்கு வழங்கி எமது உரிமைக்குரல் நசுக்கப்படுவதை நிறுத்த உதவுமாறு வேண்டுகின்றோம்.- என்றுள்ளது.

### நயினை நாகபூஷணி அம்மன் திருவிழா

# ஆலயத்துக்குவரும் பக்தர்கள் அனைவரும் சோதனைகளின் பின்பே அனுமதிக்கப்படுவர்

யாழ்ப்பாணம், ஜூன் 06

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயப் பெருந்திருவிழா காலத்தில் ஆலயத்திற்கு வருகைதரும் பக்தர்கள் அனைவரும் இப்பகுதியில் உள்ள சோதனை முகாம்களில் சோதனை செய்யப்பட்ட பின்பே ஆலயத்திற்குச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்திருவிழா தொடர்பாகக் கடந்த 29ஆம் திகதி வேலணைப் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் மு.நந்தகோபால் தலைமையில் கூட்டம் இடம்பெற்றது. இக்கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. நயினை நாகபூஷணி அம்மன் கோயில் வருடாந்தப் பெருந்திருவிழா இம்மாதம் 16ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து 15 நாள்கள் நடைபெறும்.

காரைநகர் கடற்படைக் கட்டளை அதிகாரி, கடற்படையின் நயினாதீவுப் பகுதிப் பொறுப்பாளர், ஊர்காவற்றுறைப் பொலீஸ் அதிகாரி, வடபிராந்திய போக்குவர்த்துச் சபை அதிகாரிகள் மற்றும் திணைக்கள அதிகாரிகள், தொண்டர் அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்படப் பலர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏனைய முடிவுகள் வருமாறு:

✱ திருவிழாக் காலங்களில் வழமை போல் இவ்வருடமும் குடாநாட்டின் பல பாகங்களில் இருந்தும் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் திருவிழாக் காலத்தில் ஆலயத்திற்கு வருகை தரும் பக்தர்கள் அனைவரும் இப்பகுதியில் உள்ள முகாம்களில் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட பின்னரே ஆலயத்திற்குச் செல்வதற்கு அனுமதிக்கப்படுவர்.

✱ நயினாதீவு இறங்குதுறையில் பக்தர்கள் தமது தேசிய அடையாள அட்டைகளை அங்கு கடமையில் இருக்கும் படையினரிடம் கொடுத்து இலக்கச் சிட்டையைப் பெறுதல் வேண்டும்.

✱ ஆலயத்தில் இருந்து திரும்பும் போது அந்த இலக்கச் சிட்டையைக் கொடுத்து தங்கள் அடையாள அட்டைகளை மீண்டும் பெற்றுக் கொள்ள முடியும்.

✱ சோதனை நடவடிக்கைகள் தாமதமின்றி நடைபெறுவதற்காக சோதனை நிலையங்களில் கூடுதலான படையினர் சேவைக்கு அமர்த்தப்படுவர். குறிகாட்டுவான் மற்றும் நயினாதீவு இறங்குதுறைகளில் வழமைபோல் மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களே படகுகளில் பிரயாணம் செய்ய அனுமதிக்கப்படுவர்.

✱ எக்காரணம் கொண்டும் மேலதிகமாகப் பக்தர்களைப் படகில் ஏற்றிச் செல்ல அனுமதி வழங்கப்பட மாட்டாது.

✱ படகுகளில் பயணிகளுக்கான பாதுகாப்புப் கவசங்கள் அவசியம் இருக்க வேண்டும்.

வருடாந்தம் நடைபெறுவது போல் அமுதசுரபி அன்னதான மடத்தில் தினமும் அடியார்களுக்கு மதிய உணவு வழங்கப்படும். (அ-203)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி - 24 | வியாழக்கிழமை 07.06.2007 |
| திதி : சப்தமி | பின்னிரவு : 03.32 |
| நட்சத்திரம் : | அவிட்டம் பி.ப. 10.12 |
| சுபநேரம் | : 07.22 - 08.52 |
| ராகுகாலம் | : 01.22 - 02.52 |

## புவியியல் கழகக் கருத்தரங்கு

''உடுக்களின் பரிணாமம்'' என்ற பொருளில் கருத்தரங்கு ஒன்று யாழ். பல்கலைக்கழகத்தில் இன்று நண்பகல் ஒரு மணிக்கு புவியியல்துறை மண்டபத்தில் நடைபெற உள்ளது.

பல்கலைக்கழகப் புவியியல் கழகத்தின் ஆதரவில் இடம்பெரும் இக் கருத்தரங்கை பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் கே.கந்தசாமி நிகழ்த்துவார். இக்கருத்தரங்கு நேற்று நடைபெறும் என்று வெளிவந்த செய்தி தவறாகும். (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை சீரழிவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என சுட்டிக்காட்டினர்.

இதன்போது சர்வதேச தொண்டர் அமைப்புகளுக்கு வழங்கப்பட்ட நிதி குறித்தும், ஐரோப்பாவால் வழங்கப்பட்ட நிதி எவ்வாறு செலவிடப்பட்டது என்பது குறித்தும் இலங்கையின் வடக்குப்பகுதியில் இந்தநிதி எவ்வாறு செலவிடப்பட் டது என்பது குறித்தும் விவாதமும் நடை பெறலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

இலங்கையின் வடக்கில் இருக்கின்ற தற்போதைய நிலைமைகள் குறித்து எந்த விவாதமும் நடைபெறவில்லை -

இலங்கை அரசின் அமைச்சர் மகிந்த சமரசிங்க தென்னிலங்கையில் எடுக்கப் பட்ட நடவடிக்கைகள் குறித்து மட்டுமே பேசியுள்ளார்.

இலங்கைக்கு வழங்கப்பட்ட நிதி தொடர் பாக கருத்துத் தெரிவித்த அமைச்சர் கூறிய தாவது,

கொடுக்கப்பட்ட நிதிகளை இலங்கை திறம்பட நிர்வகித்துள்ளது. இந்த நிதியா னது கல்வி, வீட்டுவசதி, சுற்றுலாத்துறை வளர்ச்சி ஆகியவற்றுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அந்தந்தத் துறைகள் ஆழிப்பேரலைக்கு பின் மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பி வருகின்றன என்ற அவர், மீள்கட்டுமா னப் பணிகளில் சில குறைபாடுகள் இருப்பதையும் ஒப்புக்கொண்டார்.

இதேவேளை -

விடுதலைப் புலிகளுடன் இணைந்து கூட்டாக அமைக்கப்படவிருந்த குழுபற்றி யாரும் அங்கு பேசவில்லை. அது குறித்த விவாதம் பின்னர் நடைபெறும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதி நிதிகள் ஐரோப்பிய ஒன்றியம் இலங் கைக்கு வழங்கிய நிதி தொடர்பாக கேள்வி களை எழுப்புவர் என எதிர்பார்க்கப்படு கிறது.

இதன் அடுத்த கட்டநிகழ்வாக இலங்கை யில் மனித உரிமைகள் தொடர்பான விவா தங்கள் நடைபெறும் எனவும் தெரிவிக்கப் படுகிறது.

(சி)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கந்தையா பொன்னம்மா (கற்பகம்)



கச்சாய் வீதி, முதலாம் ஒழுங்கை, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சின்னக்குட்டி- முத்தர் தம்பதியரின் மூத்த மகளும் அமரர் தம்பர் - கந்தையாவின் அன்பு மனைவியுமான திருமதி கந்தையா பொன்னம்மா (கற்பகம்) நேற்று 05.06.2007 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமரவேலு (நடராசா), பாலசிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), கணேசு (கிளை முகாமையாளர் தெ.கி.ப.நோ.க.ச., கொடிகாமம்), யோகரத்தினம் (இரத்தினம்), தேவராசா (சந்திரன்), இராசேந்திரம் (கிளி), அருந்தவராணி, அற்புதராணி ஆகியோரின் அன்புத் தாயும் சின்னத்தங்கம், புஸ்பராணி, கமலாதேவி, கமலம், செல்வராணி, பரமேஸ்வரி, சுந்தரலிங்கம், சுப்பிரமணியம் (லக்சியா பான்சி கவுஸ், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2007) புதன் கிழமை மகன் கணேசு இல்லத்தில் நடைபெற்று, காலை 9 மணியளவில் கொடிகாமம் கட்டைப்பறிச்சான் மயானத்தில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*முதலாம் ஒழுங்கை,*
*கச்சாய் வீதி, கொடிகாமம்.* 61366

தகவல்:
பேரப்பிள்ளைகள்.

## கந்தவனம் கமலாகரன்

வதிரி, கமலவாசத்தைப் பிறப்பிடமாகவும் வதிரி, சிவானந்தபவனத்தை புகுந்தவீடாகவும் கொண்ட கந்தவனம் கமலாகரன் நேற்று (05.06.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தவனம்-மாரிமுத்து தம்பதியரின் ஏக புத்திரனும் சந்திராதேவியின் அன்புக் கணவரும் திருமதி முத்தரசி சோமசங்கர் (ஆசிரியை-யா/தேவரையாளி இந்துக் கல்லூரி), கௌரிகாசன் (ஆசிரியர்- கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), க.சந்திரகாசன், க. எழிலரசி (யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சோ.சோமசங்கர், திருமதி சர்மிளா கௌரிகாசன் (யா/ அத்தியார் இந்து கல்லூரி), திருமதி சசி சந்திரகாந்தன் (World vison) ஆகியோரின் மாமனும் திருமதி கமலேஸ்வரி குலசேகரத்தின்அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2007) புதன் கிழமை பி.ப 2 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்வாய் பங்குவேம்படி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*"சிவானந்த பவனம்"*
*வதிரி.*

தகவல்:
க.கௌரிகாசன் (ஆசிரியர்).

## முருகுப்பிள்ளை விக்டர் அரியரத்தினம்

*(இளைப்பாறிய அதிபர்)*

குடத்தனையைப் பிறப்பிடமாகவும், ஆழியவளை, தளையடியை வசிப்பிடமாகவும் தற்போது தம்பசிட்டி வீதி, பருத்தித்துறையில் வசித்து வந்தவருமான முருகுப்பிள்ளை விக்டர் அரியரத்தினம் நேற்று (05.06.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் அபிராமிப்பிள்ளையின் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புக் கணவரும் திருமதி மகாதேவா மதுரமணி (கொட்டாவ), காலஞ்சென்ற இரட்ணசாமி ஜெயமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் அரியகுமார் (அதிபர், யா/பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம்), அருள்நேசன் (திருச்சி), அரியரஞ்சினி, அரியராணி (ஆசிரியை- திருகோணமலை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி), அரியரஞ்சன் (ஆசிரியர்- கற்கோவளம் மெ.மி.த.க.பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் இராஜமனோகரி, கன்னிகாராணி (திருச்சி), பொன்னம்பலம் (இளைப்பாறிய தபாலதிபர்), பெஞ்சமின் (திருகோணமலை), அன்ரனிற்றா (ஆசிரியை-புலோலி கிழக்கு அ.த.க.பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமனும் சிறீகரன் (பொறியியற்பீட மாணவன்- மொறட்டுவ பல்கலைக்கழகம்), யசீகரன் (கலைப்பீட ஊடகவியற்றுறை மாணவன், யாழ்.பல்கலைக்கழகம்), ரதீஸ்கரன், கரிகாலன், பிரியா, தவசினி, கல்ப்பனா, தினேஸ்குமார் (பிரான்ஸ்), ஜீவிதா, தர்சாயினி, தனுஷியா, ஐஸ்சுவா, குட்வின் தேவப்பிரியன்,யோய் நிக்சலா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (06.06.2007) புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பருத்தித்துறை இரண்டாம் குறுக்குத்தெரு மெதடிஸ்த சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தம்பசிட்டி வீதி,*
*பருத்தித்துறை.*
*தொ.பே.: 021 226 4008*

தகவல்:
குடும்பத்தினர்.

# ஆயுள்வேத வைத்தியர் பதவி: நேர்முகப் பரீட்சைக் கடிதங்களை கைதடியில் இன்று பெறலாம்

*யாழ்ப்பாணம், ஜூன் 6*

ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 18ஆம் திகதி நாவின்னவிலுள்ள ஆயுள்வேதத் திணைக்களத்தில் நடைபெறும்.

இப்பரீட்சைக்கு யாழ்.மாவட்டத்தில் இருந்து 54பேர் அழைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைக் கடிதங்கள் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு கைதடி சித்த மருத்துவத்துறை அலுவ லகத்தில் வழங்கப்படும் என்று பேராசிரியர் எஸ்.பவானி உதயனுக்குத் தெரிவித்தார்.

இந்த நேர்முகப் பரீட்சைகள் திருகோணமலையில் இடம்பெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் நாவின்னவில் ஆயுள்வேதத் திணைக்களத்திலேயே நடைபெறும் என்றும் பேராசிரியர் மேலும் தகவல் தெரிவித்தார்.

(அ-1-202)

# புலிகள் கையளித்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவற்றை ஓமந்தை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஓமந்தைச்சாவடிக்கு எடுத்துச் சென்றது.

ஆனால் அவற்றில் இரண்டு சடலங்ளை மட்டுமே பெறுப் பேற்ற படையினர் ஏனையவை படையினரின் சடலங்கள் அல்ல எனத் தெரிவித்தனர்.

அதனால் மிகுதி 11 சடலங்களும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பொறுப்பில் உள்ளன.

இதேவேளை- மன்னாரில் இரு படையினரின் சடலங்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் ஒப்படைக்க விடுதலைப் புலிகள் ஏற்பாடு செய்தனர். ஆனால் பின்னர் கையளிப்பு இடம்பெறவில்லை.

(அ-1)

# விசேட தூதுவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற் றும் தரப்புகளை அகாஷி கொழும்பில் சந்தித்துப் பேச்சு நடத்த இருக் கின்றார்.

மட்டக்களப்புக்கு செல்லும் அவர் அங்கு இடம் பெயர்ந்த மக்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்வார்.

வடக்கில் வன்னியில் இப்போதும் நிலவும் பாதுகாப்பு நிலைவரத்தைக் கருத்திற் கொண்டு அவர் கிளிநொச்சி செல்லமாட்டார் என்று அவரே கூறியதாக அறிவிக்கப் பட்டது.

இலங்கையில் மனித உரிமைகள் மோச மாக மீறப் படுவதைக் கருதிற்கொண்டு, அந்த நாட்டுக்கு வழங்கும் நிதி உதவியை குறைக்க வேண்டும் என்று 'ஹியூமன் றைட்ஸ் வார்ச்' என்ற மனித உரிமைகள் காப்பகம் ஜப்பானிய அரசைக் கேட்டிருந் தது. ஆனால் அவ்வாறு நிதி உதவியைக் குறைத்து தான் அழுத்தம் கொடுக்கப் போவதில்லை என்று ஜப்பானிய அரசு கூறியிருந்தது.

அத்தகைய சூழ்நிலையில் 'ஜப்பானினால் இலங்கை சமாதானத்தைக் கொண்டு வரும் முயற்சியில் ஜப்பானால் பெரிதாக எந்தத் திருப்பத்தையும் கொண்டுவர முடியாது என்று ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

(அ-1)

# செஞ்சிலுவை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தப்பட்ட செஞ்சிலுவைப் பணியாளர்கள் இருவர், இரண்டு நாள்களின் பின்னர் தலைநகருக்கு வெளியே சுடப்பட்டு சடலங்களாகத் தூக்கி வீசப்பட்டுக் கிடந்தனர்.

இந்தக் கொடூரத்தை ஒட்டி, ஐ. நா. செய லாளர் நாயகத்தின் அலுவலகம் வெளி யிட்ட செய்திக் குறிப்பிலேயே மேற்படி விடயங்கள் தெரிவிக்கப் பட்டிருக்கின் றன.

பிரெஞ்சுத் தொண்டுப் பணியாளர்கள் 17 பேர் மூதூரில் படுகொலை செய்யப் பட்டமை தொடர்பாகவும் விசாரணை நடத்தும் பொறுப்பு இலங்கை அரசுக்கு இருப்பதை ஐ.நா. செய லாளர் நாயகத் தின் செய்திக்குறிப்பு நினைவூட் டியுள் ளது.

(சி)


## தேவை

C++,VB Script, Java Script,தெரிந்தவர்கள் தேவை. தொலைபேசி இலக்கத்துடன் சுயவிவரக் கோவையை அனுப்பவும். சம்பளம்பேசித்தீர்மானிக்கப்படும்.

விளம்பர இலக்கம் 2976

மே/பா உதயன்



## புங்குடுதீவு மேற்கு இறுப்பிட்டி பெரியபுலம் ஸ்ரீ விரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவ (பெருர்விழா) விஞ்ஞாபனம்

07.06.2007 கொடியேற்றம்

15.07.2007 தேர்த்திருவிழா

அடியவர்களுக்கு பத்து நாள்களும் அன்னாதானம் வழங்கப்படும்

கொடியேற்ற, தேர்திருவிழா உபயகாரர்கள்.


# யாழ்ப்பாண மக்களுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதி கோரப்பட்டிருந்தது.

அனுமதி வழங்கப்படாததை ஆட்சேபித்தே நேற்று உண்ணா விரதப் போராட்டம் நடத்தப்பட்டது.

வைகோ அங்கு பேசுகையில் கூறியதாவது:

பட்டினியால் வாடும் யாழ்ப்பாண மக்களுக்கு நிவா ரணப் பொருள்கள் சேர்க்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத் தில் காயம் அடைந்தவர்களுக்கு மருந்து மற்றும் நிவா ரண பொருள்களை திரட்டி இருப்பது அரும்பணி. பசி, பட்டினியால் தவிக்கும் தமிழர்களுக்கு வழங்குவதற்காக திரட்டப்பட்ட இந்த நிவாரணப் பொருள்களை அனுப்ப மறுப்பது நியாயமற்றது. மத்திய அரசு மனித நேயத்தை குழி தோண்டிப் புதைத்துவிட்டது.

இதுபற்றி மார்ச் 10ஆம் திகதி பிரதமரை சந்தித்து முறை யிட்டேன். அவர் இதில் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறினார். ஆனால் இதுவரை அனுமதி கிடைக்கவில்லை. தமிழர்களுக்கு நிவாரண பொருள்கள் கொடுப்பதை தடுப்பது யார்? சேகரித்த பொருள்களை நொந்துபோயுள்ள யாழ்ப்பாண மக்களுக்குச் சேர்ப்பிக் கத் தடை இருக்குமாயின் தமிழக மக்களிடம் இந்த பிரச்சினை விசுவரூபம் எடுக்கும் - என்றார்.

(அ-1)


## IDM COMPUTER STUDIES (PVT) LTD.

Affiliated University College

Nation's ICT Academy - (Jaffna Branch)

அரசினால் அங்கீகரிக்கப்பட்ட கணனி நிறுவனம்

புதிய பிரிவுகள் ஆரம்பம்

Weekend 10.06.2007
Weekday 11.06.2007

**Degree Courses**

* NCC- UK
* HND- UK
* BIT- COLOMBO
* BCS- UK

ஆண்டு 10, 11 மாணவர்களுக்கு ICT வகுப்புகளும் A/L மாணவர்களுக்கு GIT வகுப்புகளும் ஆரம்பிக்க உள்ளன.

**Diploma Courses**

# Dip. in ICT
# Dip. in DTP
# Dip. in BM
# Dip. in Hardware
# Dip. in MS. Office
# Dip in Computerized Accounting
# Dip. in AutoCAD

இலங்கையில் உள்ள எமது 38 கிளை நிறுவனங்களில் விரும்பிய இடத்துக்கு, மாணவர்கள் இடம் மாறி பயிற்சி நெறியினை தொடர முடியும்.

மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்

216, Navalar Road, Jaffna. Web: www.idm.edu, www.idm.lk Tel: 021-4591398



## வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயில் கொடியேற்ற விஞ்ஞாபனம் 06.06.2007

*அம்பிகை அடியார்களே!*

அன்னையின் கொடியேற்றம் 06.06.2007 புதன்கிழமை ஆரம்பமாகின்றது.

அன்றையதினம்

காலை 8 மணி முதல்
சுழிபுரம் புகழ் சிவகுமார் குழுவினர்
ஈழநல்லூர் புகழ் பாலமுருகன் குழுவினர்
ஈழநல்லூர் புகழ் உதயசங்கர் குழுவினர்களின்
விசேட தவில் நாதஸ்வரக் கச்சேரி இடம்பெறும்.

காலை 9 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை
காலை 10 மணிக்கு கொடியேற்றம்
பகல் 12 மணிக்கு அன்னதானம் வழங்கப்படும்.

திருமதி சிவசுப்பிரமணிக் குருக்கள் சிவபாக்கியம் குடும்பம்
சிவ.ஸ்ரீபிரகாஷ் குடும்பம்
சிவ. அருள் மரகாஷ் குடும்பம்
கல்யாணசுந்தர் குடும்பம் (கனடா)
சிவஸ்ரீ சிவ.கமல்ராஜ் குருக்கள் குடும்பம்
(தேவஸ்தானம்)
கொடியேற்ற உபயகாரர்கள்.

61348


## விழி நீர் சொரியும் அருவிகள்
## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
16
*
2
*
1977



உதிர்வு
27
*
5
*
2001

### பஞ்சரத்தினம் ஜனார்த்தனன்

திதி:ஷஷ்டி

அன்புச் செல்வனே
நின் நேசத்தின் நினைவுகள்
எம் நெஞ்சை வருட
நித்தம் நினைக்கின்றோம்
நினைவுகள் கலையாமல்
ஆண்டு ஆறு ஆனபோதும்
ஆறவில்லை எம் துயரம்

தகவல்:
ஐ.பஞ்சரத்தினம் (தந்தை),
3/3, பத்திரகாளி கோயிலடி,
யாழ்ப்பாணம்.

நித்தம் உன்னை நினைவுகூரும்,
அப்பா, அம்மா, சகோதரிமார், மச்சான்மார் மற்றும் மருமக்கள் உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

61368


* அச்சுவேலி கலாமினியின் சலுகைக் கட்டணம்
* 1000 பேர் ஒரே நேரத்தில் கதிரையில் அமர்ந்து கண்டு களிக்க வசதி
* 300 பேர் ஒரே நேரத்தில் கதிரை - மேசையில் அமர்ந்து உணவு உண்டு மகிழும் வசதி
* கட்டணம் 20ஆயிரம் ரூபா மட்டும்.

**இராஜமாணிக்கம் கல்யாண மண்டபம்**

அச்சுவேலி. (குளிரூட்டப்பட்டது).

0773055080

சி-61366


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.06.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.